தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 318

தன்வந்தரி ஏரண்டத் தைலம்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர்

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 318

தன்வந்தரி ஏரண்டத் தைலம்

சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியர் :

டாக்டர். **M. நந்தகுமார்,** R. I. M. P.,

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர்.

2007

விலை : ரூ. **25-00**

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	தன்வந்தரி ஏரண்டத் தைலம்
பதிப்பாசிரியர்	:	டாக்டர். M. நந்தகுமார், R. I. M. P.,
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.
வெளியீட்டு எண்.	:	318
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	மூன்றாம் பதிப்பு
வெளியீட்டு நாள்	:	மே, 2007
தாள்	:	டி. என். பி. எல். 18.6 கி. கி.
நூல் அளவு	:	24 x 14 செ. மீ.
பக்கங்கள்	:	76
படிகள்	:	500
எழுத்து	:	12 புள்ளி
அச்சிட்டோர்	:	சரசுவதி மகால் நூலக அச்சகம், தஞ்சாவூர்.
புத்தகக்கட்டு	:	மெலிந்த அட்டை
பொருள்	:	மருத்துவம்
விலை	:	ரூ. 25-00

வெளியீட்டாளர் முகவுரை

சமுதாய மக்களின் நலனில் அக்கறை கொண்டவர்கள் சித்தர்கள். இவர்கள் மக்கள் ஈட்டிய பொருளை தவறான வழியில் செலவிடுதல், பரத்தமை, சாதிப் பாகுபாடு போன்ற சமூகக் கேடுகளைச் சாடுபவர்கள். பரஞ்சோதி முனிவரும், சைவ எல்லப்பநாவலரும், பாம்பாட்டிச் சித்தரும், தாயுமானவரும் சித்தர்களின் அற்புதங்களைப் பாடுவர்.

நோய்களின்றும் மக்களைக் காக்க இயற்கைப் பொருட்களைக் கொண்டு எளிமையாக மருந்துகளைத் தயாரித்து மக்களுக்கு அளித்துவந்தனர். இவர்தம் மருத்துவம், சித்த மருத்துவம் என அழைக்கப்படுகிறது. காமம், பசி, பக்திக் குறைவு, கவலை போன்றவற்றால் நோய்கள் ஏற்படுகின்றன என நோய்களின் மூலகாரணங்களை விளக்கி அவற்றை விலக்கி வாழ்வை அமைத்துக் கொள்ளுமாறு இவர்கள் அறிவுறுத்துகின்றார்கள்.

மன்னர் சரபோஜி அவர்கள் தம் அரண்மனை மருத்துவச் சாலையில் தேர்ந்த மருத்துவத்துறை வல்லுநர்களைக் கொண்டு ஆராய்ந்தும், மரபுவழி அனுபவமாக அறிந்தும் பெற்ற மருத்துவ முறைகள், மருந்து செய்யும் முறைகளைத் தமிழ்ப் புலவர்களைக் கொண்டு செய்யுட்களாக ஓலைச் சுவடியில் எழுதிவைத்துள்ளார்கள். அம்மருத்துவ முறைகளடங்கிய ஓலைச்சுவடிகள் சரசுவதி மகால் நூலகத்தில் பாதுகாக்கப் பெற்றும், நூல்களாக வெளியிடப்பட்டும் வருகின்றன.

தன்வந்தரி ஏரண்டத்தைலம் எனும் இந்நூல் மிகுதியும் லேகிய வகைகள் பற்றிக்கூறுகின்றது. இதில் கூறப்பட்டுள்ள லேகியங்கள் அனைத்தும் மனிதர்களின் மிக முக்கியமான நோய்களைத் தீர்க்கும் எனக் கருதப்படுகிறது. கடுக்காய் லேகியம், மிளகு லேகியம், வெள்ளைப்பூண்டு லேகியம், ஓம லேகியம், பெருங்காய லேகியம், மதனகாரும் சுறா லேகியம், ஊது மதன காம சுரக்க லேகியம் இவைகள் எல்லாம் அனைத்து வியாதிகளையும் குணமளிக்கக்கூடிய அளவிற்கு மிகச்சிறந்த லேகியமாகும் என பதிப்பாசிரியர் கூறுகின்றார். இத்தகைய லேகியங்கள் நல்ல மூலிகைகளைக் கொண்டும், மருந்து வகைகளைக் கொண்டும் செய்யப்பட்டுள்ளதை இச்சுவடியில் குறிக்கப்பட்டுள்ளது.

இந்நூல் வெளிவர நிதியுதவி நல்கிய நடுவண் அரசுக்கும், சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு) வகிக்கும் திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும், இந்நூலை நன்முறையில் அச்சிட்ட நூலகப் பதிப்புத்துறை பணியாளர்களுக்கும், இந்நூல் வெளிவரத் துணை நின்ற ஏனையோருக்கும் என் இனிய பாராட்டுக்கள்.

சா. விஜயராஜ் குமார், இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் இயக்குநர்.
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
6 -5-2007

முன்னுரை

விநாயகர் துதி

"கணபதி யென்றிடக் கலங்கும் வல்வினை
கணபதி என்றிடக் காலனுங் கைதொழும்
கணபதி என்றிடக் கரும மாதலால்
கணபதி யல்லது கருமமில் லையே."

அன்பார்ந்த வாசகர்களுக்கு வணக்கம்.

அக்காலத்துச் சித்தர்கள் சித்து, ஞானம், யோகம் ஆகியவகைகளை நன்கு தெரிந்துகொண்டு உலகத்து மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்பதற்காக அவர்கள் கற்றறிந்த மருந்து மூலிகைகளைப் பற்றியும் மருந்து வகைகளைப் பற்றியும், பாசாண மருந்துகளைப் பற்றியும் தெரிந்துகொண்டு மருந்துகளைத் தயார் செய்து வியாதி உள்ளவர்களுக்குக் கொடுத்து வியாதியைக் குணப்படுத்தி இருக்கிறார்கள். இத்தகைய தொண்டை அக்காலத்துச் சித்தர்கள் உண்மையாகவும், நேர்மையாகவும் உலகத்து மக்களிடம் அன்பாகவும் இருந்து வந்திருக்கிறார்கள் என்பதை நாம் சில சுவடிகளின் மூலமாகத் தெரிந்துகொண்டோம்.

இத்தகைய பணியை அக்காலத்துச் சித்தர்கள் மிக உயர்ந்த தொண்டாக நினைத்து இயற்கையாகக் கிடைக்கும் மருந்து மூலிகைகளைக் கொண்டு இம்மூலிகைகளை மருந்துகள் செய்யும் அளவிற்குச் சுத்தி முறைகளைச் செய்து பாசாண மருந்துகளை உட்கொள்ளும் மருந்திற்கு ஏற்றவாறு சுத்தி செய்து விஷத்தன்மையைக் குறைத்து சில மருந்துகளுக்குச் சேர்த்து செய்து நோயுள்ளவர்களுக்குக் கொடுத்து குணம் செய்திருக்கிறார்கள் என்பதையும்

அவர்களின் அனுபவ ரீதியில் இக்காலத்து மக்களுக்குத் தெரிந்துகொள்வதற்காக இச்சுவடியின் மூலமாக அக்காலத்துச் சித்தர்கள் எழுதிவைத்திருக்கிறார்கள்.

அப்படி எழுதிவைத்தச் சுவடிகளில் ஒரு பகுதியான இச்சுவடியில் சில முக்கியமான நோய்களுக்கு மருந்து செய்யும் முறைகளையும், மருந்து வகைகளையும் எழுதி வைத்துள்ளார்கள். குறிப்பாக இச்சுவடியில் குன்மம் என்ற வியாதிக்கு அனைத்து முறைகளையும் முறைப்படுத்தி மருந்து முறைகளாக எழுதப்பட்டுள்ளது. குன்மம் எட்டு வகை உண்டு. சித்தர்கள் இச்சுவடியில் 18 வகையான குன்மத்தை நிவர்த்தி செய்வதற்காகச் சில மருந்துகளைத் தெளிவாகக் குறிப்பிட்டு எழுதிவைத்திருக்கிறார்கள். இது மாதிரி இன்னும் சில வியாதிகளுக்குச் சில மருந்துகளைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பவுத்திரம் என்ற நோய்க்கும் இந்தப் பவுத்திரம் புண்ணாகி புரையோடியிருந்தாலும் நிவர்த்தி செய்வதற்கு நல்ல மருந்துகள் இந்த நூலில் இடம் பெற்றுள்ளன.

இச்சுவடியில் அதிகமாக லேகியத்தைப் பற்றிக் கூறப் பட்டுள்ளது. இதில் கூறப்பட்டுள்ள லேகியங்கள் அனைத்தும் மனிதர்களுக்கு மிக முக்கியமான லேகியம் ஆகும். காரணம் மனித உடல்களுக்கு மிக அதிகமான லேகியம் ஆகும். கடுக்காய் லேகியம், மிளகு லேகியம், வெள்ளைப்பூண்டு லேகியம், ஓம லேகியம், பெருங்காய லேகியம், மதனகாரும் சுறா லேகியம், மதன காம சுரக்க லேகியம் இவைகள் எல்லாம் அனைத்து வியாதிகளையும் குணமளிக்கக்கூடிய அளவிற்கு மிகச்சிறந்த லேகியமாகும். இத்தகைய லேகியங்களில் நல்ல மூலிகைகளைக் கொண்டும், மருந்து வகைகளைக் கொண்டும் செய்யப்பட்டுள்ளதை இச்சுவடியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச்சுவடியில் விஷம் சம்பந்தப்பட்ட மருந்துகளைச் சுத்தி செய்யும் முறைகளை எளிதான முறையில் மற்றவர்

களும், மருத்துவ அறிஞர்களும் நன்கு புரிந்து கொள்ளும் அளவிற்குக்குறிக்கப்பட்டுள்ளது மேலும் இச்சுவடியில் கடவுளை வணங்கும் முறைகளைப் பற்றியும், எப்படி யெப்படி வணங்கவேண்டும் என்பதையும் தேவி அம்மனை வணங்கும் முறையைப் பற்றியும் குறிக்கப்பட்டுள்ளது. எனவே இத்தகைய மருத்துவ நூல்களை அனைத்து மக்களும் நன்கு படித்து, புரிந்து மருந்துகளைச் செய்ய வேண்டுமாயும் கேட்டுக் கொள்வதுடன் சில நோயாளி களுக்கு இந்த நூலில் குறிக்கப்பட்டிருக்கும் மருந்து முறை களைப் பற்றி சற்று சந்தேகங்கள் இருப்பின் பதிப்பாசிரி யருக்கு கடிதம் மூலமாகத் தெரிவித்தால் உடன் தகுந்த பதிலும், சந்தேகங்களையும் உடன் நிவர்த்தி செய்வன். எனவே பொதுமக்களாகிய தாங்கள் இத்தகைய மருந்து முறைகளைச் செய்ய வேண்டும், என்ற விருப்பம் இருந்தால் சித்த வைத்திய அறிஞர்களின் ஆலோசனையையும் கருத்துக் களையும் கேட்டு மருந்துகளைச் செய்யும்படி இந்த நூலைப் பதிப்புச் செய்த ஆசிரியர் மிக அன்புடன் கேட்டுக் கொள்கிறார். இத்தகைய நூல் பொதுமக்களுக்குப் பயன் படவேண்டும் என்பதற்காக நிதிஉதவிசெய்த மத்திய சர்க்காருக்கும், மாநில சர்க்காருக்கும் தேவையான உதவி கள் நல்கிவரும் சரஸ்வதி மகால் நூலக இயக்குநர் மற்றும் நூலக அலுவலர்களுக்கும் என் நன்றியை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வணக்கம்

தங்கள் உண்மையுள்ள

மு. நந்தகுமாரி

குறிப்பு-1

இச்சுவடியில் குறிக்கப்பட்டிருக்கும் மருந்துமுறை பாடல்களின் சில பிழைகள் திருத்தப்பட வில்லை

விளக்கத்தில் திருத்தி எழுதப்பட்டுள்ளது. இவற்றிற்குக் காரணம் அக்காலத்துச் சொல்லமைப்பு, எழுத்து வடிவம் அழியாமல் இருக்கவும் இக்காலத்து மக்கள் தெரிந்து கொள்வதற்கும் மூலத்தின் பாடல்களைத் பிழைகளை திருத்தம் செய்யவில்லை என்பதை வாசகர்களுக்கு வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பு-2

இச்சுவடிப் பதிப்பில் சில மருந்து முறைகளில் சில மருந்துவகைகள் விடப்பட்டிருந்தாலும் வேறு சில குறைபாடுகளும் இன்னும் சிறப்பாகப் பதிப்புச் செய்யலாம் என்று ஆலோசனை தெரிவித்தால் அல்லது கருத்துத் தெரிவித்தால் மேற்படி நூலகத்தின் வாயிலாக அடுத்த பதிப்பில் சரிசெய்யப்பட்டு அச்சுப்புத்தகமாக வெளியிடப் படும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொருளடக்கம்

சுவடி மருந்து முறை எண்.	மருந்து முறைகளின் பெயர்	பக்கம்
1.	தன்வந்தர் மந்திரி சொன்ன ஏரண்ட தைலம் ...	1
2.	வல்லாதி லேகியம் செய்யும் முறையும் இதன் உபயோகமும் ...	3
3.	சத்தி குன்மத்தின் குறிகுணம் ...	5
4.	மரணத்தின் குறிகுணம் ...	7
5.	பிர சறுவ கோடா குளிகை ...	8
6.	தீப சிந்தாமணி மருந்து ...	11
7.	குன்ம நிவர்த்திக்கு மருந்து ...	12
8.	மேகத்துக்குப் பேதி எண்ணெய் ...	13
9.	மலட்டுப்பூச்சி நிவர்த்திக்கும் பிள்ளை இல்லாதவர்களுக்குக் கர்ப்பம்தரிக்கவும் மருந்து ...	15
10.	தாளிசபத்திரி குளிகை ...	17
11.	அகத்திய முனிவர் அருள்பெற வைத்தியர்கள் பாடிய பாடல்கள் சுருக்கம் ...	19
12.	லிங்கம், பூரம், வெள்ளை, வெங்காரம், கெந்தகம் இவைகளைச் சுத்தி செய்யும் முறை ...	19
13.	நாசியில் போடும் மருந்து ...	21
14.	துருசு சுத்தி செய்யும் முறை ...	22
15.	மேகவாயுவுக்கு சூரண மருந்து ...	23

சுவடி மருந்து முறை எண்.	மருந்து முறைகளின் பெயர்		பக்கம்
16.	கடுக்காய் லேகியம்	...	24
17.	மிளகு லேகியம்	...	26
18.	வெள்ளைப்பூண்டு லேகியம்	...	28, 29
19.	ஓம லேகியம் செய்யும் முறையும் இதன் உபயோகமும்	...	30, 31
20.	பெருங்காய லேகியம் செய்யும் முறையும் உபயோகமும்	...	32
21.	சுரத்துக்குக் குளிகை (சுரத்துக்கு மாத்திரை மருந்து)	...	34
22.	மதன காம சுரக்க லேகியம்	...	36
23.	பெரும்பாட்டிற்கு மருந்து	...	40
24.	அறுபத்து நான்கு வகை மருந்துக்குச் சுத்தி செய்ய மூலப்பொருள் குறிப்பு	...	41
25.	மதன காடும் சுறா லேகியம்	...	42
26.	குன்மத்துக்கு மருந்து	...	45
27.	பதினெட்டு குன்ம வகைகளுக்கும் வாயுவு சம்மந்தப்பட்ட வியாதிகளுக்கும் மருந்து	...	46
28.	துடை வாலை, விப்புறுதி இவைகளுக்குக் கறி எண்ணெய் மருந்து	...	49
29.	உடல் நீர்கட்டு, சதைப்பிடிப்பு, உடல் வீக்கத்திற்கு, சூலைப் பிடிப்புக்கு புறங்கால் கட்டு இவை நிவர்த்திக்கு மருந்து	...	50
30.	சித்த சுரண்டை மருந்து செய்யும் முறையும் உபயோகமும்.	...	52
31.	பவுத்திரம் நொந்த புண் புரைக்கு மருந்து		

சுவடி மருந்து முறை எண்.	மருந்து முறைகளின் பெயர்		பக்கம்
32.	குமரி பற்பம் செய்யும் முறையும் இதன் உபயோகமும்	...	55
33.	பவுத்திரம் கண்டமாலை இவைகள் நிவர்த்திக்கு மருந்து	...	56
34.	கண்விழிகளில் நீர்வடிதல், கண்கலக்கம், கண்புண், புரை இவைகள் நிவர்த்திக்குக் கலிக்க மருந்து	...	59
35.	ஈளை இருமலுக்கு நெய் மருந்து செய்யும் முறை	...	60
36.	கெவுரியர் திஷ்ய எச்சை	...	62
37.	உன் மனையா சத்தி தீட்சை	...	62
38.	கோயிலுக்குச் சென்று வணங்குவதைக் குறித்தது.	...	62

OUR OTHER PUBLICATIONS

Nauka Charitram	Sanskrit & Tamil	30-00
Sita Kalyanam	Sanskrit & Tamil	35-00
Gayatri Kosam	Sanskrit & Tamil	30-00
Ragaratnakaram	Sanskrit & Tamil	15-00
Dhanyakumaracharitram (Dharmaneri Kathai)	Sanskrit & Tamil	44-00
Kandukapura Mahatmyam	Sanskrit & Tamil	25-00
Ramachinthamani Aaruudam (Nandinagari Catalogue)	Sanskrit & Tamil	25-00
Vruttaratnavali (Chandas Sastram)	Sanskrit & Tamil	30-00
Kalanandakam	Sanskrit & Tamil	55-00
Prabodha Chandrika (Grammer)	Sanskrit & Tamil	70-00
Sirungarakosam	Sanskrit	12-00
Vedasara Siva Sahasram	Sanskrit	80-00
Stotra Ramayanam	Sanskrit	25-00
Mukunda Vilasam	Sanskrit	35-00
Vinatananda Vyayoga	Sanskrit	40-00
Kumaresa Satakam	Tamil	65-00
Lokaswarupam	Tamil	75-00
Kanakkathikaram	Tamil	150-00
ThiruvappanurPuranam	Tamil	50-00
Sowmiya Sagaram	Tamil	70-00
Jatakachandrika	Tamil	40-00
Marathi Lavani Songs	Marathi	35-00
Nakshatra Chinthamani (Part - I)	Tamil	100-00
Nakshatra Chinthamani (Part - II)	Tamil	200-00

தந்வந்தரி ஏரண்டத் தைலம்

தந்வந்தரி மந்திரி சொன்ன ஏரண்டத் தைலம்.

ஃலை மருந்து முறை : 1.

கய்யான் தகரை	சேர்	2
சமசும் குப்பி சாறு		2
நீர்முள்ளிச்	,,	2
குப்பமேனி	,,	2
குமட்டி	,,	2
செறுப்படி	,,	2
யீருள்ளி	,,	2

தூதுவிலைச்சார் காசிடை ரெண்டு வீ விளக் கெண்ணை சேர் 2 யெரித்து மொழுகு பதத்தில் மாதம் ஒரு தடவை சாப்பிடவும். உடம்பு தன்னை இமிர்ந்தால் காமாலை வாதம், கறப்பான் வீக்க சேரவே. விஷப்பாகம் கரம் மேல் வீக்கம்-

யெலைப்பு-அசடி இறங்கல்-சிசவீக்கம்-சிதகட்டுப்புழு மெச்சல் தனாறும் மெர கவுசையு சிபு கவுசை மூலமுடன் வாயு வயித்தில் வலி-வாதம் மகொதரங்கல்-விசாதி அரிந்து ஆவிதம் குடுத்து பற்றி யிச்சா பத்தியம்.

செய்யும் முறையும் இதன் உபயோகமும்.

மேற்படி தைலத்தில் ஒன்பது வகையான மருந்து வகை கள் சேர்க்கப்பட்டு உள்ள காரணத்தால் இந்தத்

தைலத்திற்கு ஏரண்ட தைலம் என்ற பெயரைத் தந்த சுந்தரநந்தரி மந்திரி என்ற சித்தர் பெயர் இட்டு கலடியில் குறிக்கப்பட்டு உள்ளது.

தைலத்திற்குத் தேவையான மருந்துகளின் விபரம் :

1. கையாந்தகரை (கரிசலாங்கண்ணி) சாறு சேர்-2
2. சங்கம்குப்பிசாறு ,,
3. நீர்முள்ளிச்சாறு ,,
4. குப்பைமேனிச்சாறு ,,
5. குமட்டிச்சாறு ,,
6. சிறுசெருப்படிச்சாறு ,,
7. பிருள்ளிச்சாறு (பூண்டு) சேர் ,,
8. தூதுவிலைச்சாறு ,,
9. விளக்கெண்ணை ,,

மேற்குறிக்கப்பட்டு இருக்கும் மருந்து வகைகளை விதிப்படி எடுத்து ஒரு பெரிய எண்ணெய்ச் சட்டியில் ஊற்றிஅடுப்பில் வைத்துச் சிறுக எரியவிட்டு மெழுகுபதம் வரும் வரை காய்ச்சி வடிகட்டி வைத்துக் கொள்ளவும்.

உட்கொள்ளும் அளவு :

ஒரு காசு எடை (இரண்டு வீ)

காலம் :

மாதம் ஒரு முறை மட்டும். அல்து இரு முறை

தீரும் வியாதிகள்

உடல் இயிர்தல, கா மாலை, வாதம், கரப்பான் வகைகிரந்தி, விஷப்பாண்டு, சுரம், மேகவீக்கம், இளைப்பு சுவீக்கம், சீதக்கட்டுப்புழு ரோகவுசையு, கவுசை மூலம் வாய்வு, வயிற்றுவலி, வாதம், மேகாதரங்கள், மேற்கண்ட வியாதிகள் தீரும்.

பத்தியம் :

இச்சாபத்தியா, புளி, உப்பு, அசைவ உணவுகள் நீக்கவும்.

பல்லாதி லேகியம் செய்யும் முறையும் இதன் உபயோகமும்

சுவடி மருந்து முறை : 2

வேறு-விலாம்பட்டை வெள்ளறு-கொடிவேலி வேர்-வெம்புபட்டை - சிவதைவேர் - பூவரசம்பட்டை - சிவனார் வேப்பு - சங்கவேர் - கரவாய்ப்பட்டை - குளப்பாலைவேர் வகை கரி பூ-கு-திழல் உனக்கு யிடித்து வடிகட்டி திரிகடுகு வாய்விளங்கள் - திரிபாலை - கவஞ்சிரகம் கல்நார் - ஓமம் - வேம்பாலரிசி-உடன் காட்டு சீரகம் - வ - மூலகு - சதகுப்பை தாளிசபத்திரி - கலமதம் - வீ கவக்கரிபூறா - கூட்டி வறுத்து இடித்து சேலம் சக்கரை னாலி வினான்று கூட்டி சாப்பூவூா கங கைப்பு நாச் சீரகம் பு - உ சித்திரமூலம் பூ - க ஏலம் பூ - ணா செவ்யம்பூ - ச சுக்கு பூ - நஉ மிளகு - பூ - ச யிது வெல்லாம் யிடித்து வடித்து அதுலே கரைத்து-காச்சி மறுத்துளாலி-திப்பிலி பூ-உ லவங்க பத்திர பூ-ஞ-க ளிச பத்திரி பூ-க மதுரம் பூ-று-அதுலே தூள் பண்ணி போட்டு கும்பி போகாமல் களியாறே கறிஞ் தேன்னாளி விட்டு கின்றி கொட்ட பாக்களவு-கொள்ளவும்.

உ - தீரும் வியாதி-

எரிதுமம் - கிரானி சக்கு - வெள்ளைரக் கர்ரனம் ஊக காச்ச வறீக் காமாலை - கவாசகாமாலை - பிசைம் ஆயாச பிரண்டு ஆளே சிம கிறாமி பீலி கை பித்தக் காதிப் பூ யிது வெல்லாம் தீரும் கை கண்டது

தேவையான மருந்துகளின் விபரம் :

1. விளாம்பட்டை 35 கிராம்
2. வெள்ளெருக்கம் வேர்ப்பட்டை 35 கிராம்
3. கொடிவேலிவேர்ப்பட்டை ,,
4. வேப்பம்பட்டை ,,
5. சிவதைவேர் ,,
6. பூவரசம்பட்டை ,,
7. சிவனார் வேம்பு ,,
8. சங்கம்வேர் ,,
9. கரவாய்ப்பட்டை ,,
10. குளப்பாலைவேர் ,,
11. சுக்கு ,,
12. மிளகு ,,
13. திப்பிலி ,,
14. வாய்விளங்கம் ,,
15. தான்றிக்காய் ,,
16. கடுக்காய் ,,
17. நெல்லிவத்தல் ,,
18. கருஞ்சீரகம் ,,
19. கல்நார் ,,
20. ஓமம் ,,
21. வால்மிளகு ,,
22. சதகுப்பை ,,
23. தாளிசபத்திரி ,,
24. கல்மதம் ,,
25. உப்பு ,,
26. நச்சீரகம் ,,
27. சித்திரமூலம் ,,
28. ஏலம் ,,
29. லவங்கபத்திரி ,,
30. மதுரத்துளாவி ,,

மருந்து செய்யும் முறை :

மேற்கண்ட மருந்து வகைகளை வகைப்படி எடுத்துக் கொண்டு சுத்திசெய்து இதனை எல்லாம் லேசான தீயில் வறுத்துக் கல்லுரலில் போட்டு நன்கு இடித்துத் தூள் செய்து சீலைவடிகொண்டு இதனை வடிகட்டிச் சூரணத்தை எடுத்து வைத்துக்கொள்ளவும். ஒரு சட்டியில் சர்க்கரைப் பாகு செய்து கொண்டு மேற்படி செய்து வைத்திருக்கும் மருந்து சூரணத்தை இந்தப்பாகில் தூவி நன்றாகக் கிண்டி மெழுகுபதம் வந்தவுடன் அடுப்பைவிட்டு இறக்கித்தேன், நெய் இவைகளை இந்த லேகியத்திற்குத் தகுந்தாற்போல் ஊற்றிக் கலந்து நன்றாகக்கிண்டி ஆறவைத்துப்பாட்டிலில் வைத்துக் கொள்ளவும்.

உட்கொள்ளும் அளவு :

ஒரு நாள் ஒன்றுக்கு ஒரு வேளைக்கு மட்டும் பத்து கிராம் எடை வீதம் சாப்பிடவும்.

உட்கொள்ளும் காலம் :

48. நாட்கள் (ஒரு மண்டலம்)

தீரும் வியாதிகள் :

எரிகுன்மம், கிராணிக்கழிச்சல், ஊது காய்ச்சல், வற்றக் காமாலை சுவாசகாமாலை, பீனிசம், ஆயாசம், பித்தகாசம், களைப்பு இவைகள் தீரும்.

சத்திகுன்மத்தின் குறிகுணம்

சுவடி மருந்து முறை : 3

வலிகுணவாவுதானெ-சத்திகுன்மம்-நெஞ்சுமே-யெரித்த பித்தெக்காய் - நின்றே யுதாராம் பொருமலுமா - சந்தமுற வே - சத்தியுமா-தருகா - கருவாமலந்தியும் மருச பிற்றம் வாதமும் மாயி மதுரம் படவே பகைப்பதேனில் தஞ்சத்துட னே - சத்திகுணம் - தானே குணத்தே சாத்தினதே.

விளக்கம் :

வாயு அதிகரித்து வயிறு பொருமும். அன்னம் செரிக்காது வாந்தியாகும். நெஞ்சு எரியும், புளித்தேப்பமிடும். உடல் வெளுத்துவற்றும். ஆயாசம் மற்றும் களைப்பு உண்டாகும். மலம் கருகும்.

இவை நிவர்த்திக்கு மருந்து :

இந்துப்பு	35 கிராம்
வெங்காரம்	,,
வெள்ளுளி (பூண்டு)	70 கிராம்
தவச்சாரம்	10 கிராம்
தேங்காய்ப்பால்	1 லிட்டர்
கள்ளிப்பால்	¼ லிட்டர்

இவைகள் அனைத்தையும் ஒன்றாகக்கலந்து அடுப்பில் வைத்துக் காய்ச்சி எண்ணைப் பதம் வந்தவுடன் இறக்கி ஆறவைத்து வடிகட்டி வைத்துக் கொள்ளவும்.

உட்கொள்ளும் அளவு :

நாள் ஒன்றுக்கு ஒருவேளைக்கு 130 மில்லிகிராம் வீதம் சாப்பிடவும்.

உட்கொள்ளும் காலம் :

48 நாட்கள். (ஒரு மண்டலம்)

பத்தியம் :

புளிப்பு, உப்பு இவைகளை நீக்கவும்.

தீரும் வியாதிகள் :

சக்திகுன்மம்.

மரணத்தின் குறிகுணம்

சுவடி மருந்து முறை : 4

நெஞ்சுமே எலும்பும் வத்தி-நிலை புறநரம்பு
தோண்டி-பஞ்சு போல் வாவும் கண்ணு-பாண்டமும்
வெழுப்பதாகி-கொஞ்சுளே ஆன மவுங்கி-குறிசியே வலம்
நீயும்-துஞ்சுவே துன்ம்மையெண்டு சொல்லதுத்தாமே உ.

விளக்கம் :

பொதுவாக மரணம் என்றால் இயற்கையாகவும் அல்லது நீண்ட நாட்களாக நோய் பாதிக்கப்பட்டுப் பூரண குணமின்றி உடல்நிலை மிகவும் பாதித்து மரணம் ஏற்படலாம். இப்படிப்பட்ட மரணங்கள்தான் இயற்கையான மரணமாகும். இத்தகைய இயற்கையான மரணங்களில் பலவகையான குறிகுணங்கள் இருக்கின்றன. இருப்பினும் இச்சுவடியில் குறிக்கப்பட்டிருக்கும் மரணக் குறிப்பு ஒரு வகையைச் சார்ந்ததாகும். இதன் விளக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

மார்பு எலும்பு வத்தி நிலைதப்பி, புறநரம்பு இரேகத்தின் மீது தெரியும். விழி நாசி, காது உச்சி, உந்தி உள்ளங்கால் கைகள் வெளுத்துப் பாதம் குளிர்ந்தால் ஐந்து நாழிகையில் வாதபித்தம் அடங்கும். கண்டத்தில் கபம் அடைத்து இளைத்து விழிகள் மங்கி கண்களில் நீர்வடியும். ஐந்து நாழிகையில் முகம் நீண்டு உடம்பெல்லாம் நரம்பு தோன்றிப் பாசிபோல் கண்கள் பஞ்சடைத்து இருள் சூழ்கி யும் விசை நரம்பு குளிர்ந்து தளர்ந்து விரைத்து வாங்கிப் பொறிகளும் மிகுதியாய்த்தளர்ந்து நறநற எனப் பற்கடித்து நடுக்கமுண்டாய் வாத பித்த சிலேத்துமம் விட்டிவைப் போற்றுடித்திடினு மரணம்.

குறிப்பு :

குன்மத்தில் பல வகையுண்டு. பொதுவாக ஒன்று வாதகுன்மம். பித்தகுன்மம். சிலேத்துமகுன்மம், வலிகுன்மம் எரிகுன்மம், சூலைகுன்மம் இவைகளைப்போல சத்திகுன்மம் என்பது ஒரு வகைப்படும்.

விஜய அநுபவ கோடா குளிகை

சுவடி மருந்து முறை : 5

சூதம்	பொரிவி வெண்காரம்
கெந்தகம்	நேர்வாளம்
அன்னபேதி	ஆவரைக்காய் உ
கடுகு ரோகிணி	துத்த மதுருசு
	கெவுரி பாஷாணம்
தான்றிக்காய்	சுருக்காயி
	நெல்லி முள்ளி

திரிகடுகு
அக்கிரகாரம்
லிங்கம்
நாவி

வகை ஒன்னுக்கு பொருகலந்து கரப்பான் சாற்றில் எழுநாள் ஒரு ஒரு சாமம் அரைத்து சிறு பயறு அளவு உருட்டி நிழலில் உலர்த்தி அனுபானவிதமா அறியவும்.

தேவையான மருந்துகளின் விவரம் :

1. இரசம் 10 கிராம்
2. கெந்தகம் ,,
3. அன்னபேதி 15 கிராம்
4. கடுகு ரோகிணி ,,
5. தான்றிக்காய் ,,
6. சுக்கு ,,
7. மிளகு ,,

8.	திப்பிலி	35 கிராம்
9.	அச்சறீகாரம்	10 கிராம்
10.	லிங்கம்	,,
11.	நாவி	,,
12.	பொரிவெங்காரம்	20 கிராம்
13.	நீர்வாளம்பருப்பு	,,
14.	துத்தத்துருசு	10 கிராம்
15.	கெவுரிபாஷாணம்	,,
16.	கடுக்காய்	35 கிராம்
17.	நெல்லிமுள்ளி	,,

மேற்கண்ட மருந்து வகைகளைக் குறித்த விகிதப்படி எடுத்துக்கொண்டு ஒரு பெரிய கல்லத்தில் போட்டுக் கரிப்பான் சாற்றில் ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு ஜாமம் வீதம் (மூன்று மணி நேரம்) அரைக்கவும். இப்படி ஏழு நாட்களுக்கு ஏழு ஜாமம் அரைக்க வேண்டும். இப்படி அரைத்த மருந்தை பயறளவுக்கு உருண்டை செய்து நிழலில் காய வைத்துக்கொண்டு பத்திரமாக வைத்துக்கொள்ளவும். இந்த மருந்தை கீழ்க்குறிக்கப்பட்டுள்ள வியாதிகளுக்கு

கீழ்க்கண்ட அனுமானத்தில் கலந்து கொடுக்கவும் :

1. இந்த மருந்து உருண்டையை எலுமிச்சம்பழச் சாற்றில் உரைத்து விஷம் கடித்த இடத்தில் (கடிவாயில்) தடவினால் விஷம் இறங்கும்.

2. இந்த மருந்தை இஞ்சிச்சாற்றில் உரைத்துக் கொடுத்தால் ஜன்னி ஜுரம் தீரும்.

3. தேள் கொட்டிய இடத்தில் இந்த மருந்தை தண்ணீர் விட்டு உரைத்துக் கடித்த இடத்தில் தடவினால் வலி போகும்.

4. இந்த மருந்தைத் துளசிச் சாற்றில் உரைத்துக் கொடுத்தால் ஜன்னி ஜுரம் தீரும்.

5. இந்த மருந்தை நச்சீரகம் பொடித்தூளில் கலந்து கொடுத்தால் அஜ்ரண ஜுரம், மந்தஜுரம் தீரும்.

6. இந்த மருந்தை வெற்றிலைச் சாற்றில் உரைத்துக் கண்ணில் போட்டால் காமாலை தீரும்.

7. இந்த மருந்தை வேலிப்பருத்திச்சமூலத்தை அணலில் காண்பித்து வெதுப்பிச்சாற்றைப் பிழிந்து கலந்து சாப்பிட்டால் பழைய நோய்கள் தீரும்.

8. புளியமரத்தின் பட்டையைச் சுட்டுச் சாம்பல் செய்து இந்த மருந்தைக் கலந்து சாப்பிட்டால் பாண்டு ரோகம் தீரும்.

9. இந்த மருந்தைத் திலகம் இட்டுப் போனால் வசியமாகும். (தெளிவுடன் இருப்பார்கள்)

10. இந்த மருந்தை நொச்சிச் சாற்றில் கலந்து சாப்பிட்டால் சுவாசகாசம் தீரும்.

11. இந்த மருந்தைக் கையாந்தகரைச் சாற்றில் கலந்து சாப்பிட்டால் காசம் தீரும்.

12. இந்த மருந்தைப் பச்சை நெல்லிக்காய்ச் சாற்றில் கலந்து உட்கொண்டால் வயிற்றுக் கடுப்புத் தீரும்.

13. இந்த மருந்தை நற்சீரகப் பொடியுடன் சர்க்கரையும் கலந்து சாப்பிட்டால் வயிற்றுவலி, வயிற்று உப்பிசம், வயிற்று இரைச்சல் தீரும்.

14. இந்த மருந்தை வெத்திலைப்பாக்குடன் மென்று உட்கொண்டால் ஈளை, இருமல், இரைப்பு தீரும்.

15. இந்த மருந்தைக் கழுதை மூத்திரத்தில் உரைத்து உட்கொண்டால் பயம் பீதி இவைகளைத் தவிர்க்கலாம்.

உட்கொள்ளும் காலம் :

வியாதி குணமாகும் வரை சாப்பிடவும்.

பத்தியம் :

வியாதிகளுக்கு ஏற்றபடி உணவு வகைகளைச் சேர்த்துக் கொண்டு நீக்கவேண்டிய உணவு வகைகளை நீக்கவும்.

குறிப்பு :

பாஷாண வகை மருந்துகளை மட்டும் சுத்திசெய்த பிறகுதான் மருந்து செய்ய எடுத்துக்கொள்ளவும்.

தீப சிந்தாமணி மருந்து

சுவடி மருந்து முறை 6

தீப சித்தாணி சுக்கு மிளகு அரிதாரம் மஞ்சல் லிங்கம் துருசு அக்கிரக்காரம் சமன் கூட்டி தாளப்பன்னி-ஒன்பத்து னியில்குட்டி தீபம் காட்ட மிக்க பிறமி-பவுத்திரம்-மேகவெட்டி சூலை-ஓட்டியாபுண் கிறந்தி கடிகை சிக்கெனவே யுறுவாத பிணிகள் தனைவெட்டு மந்தியச் சிந்தாமணி யிது வேண்டு செப்பினாரே. யிதுக்குப்பக்குவம் துவரைப்பருப்பு அரை கீரை வெள்ளாட்டுப்புகண்டம்-கூட்டவும்-கனால்குளிற்ந்த நீரில் முழுகி வந்து மதத்து கூட்டவும்.

தேவையான மருந்துகள் விபரம் :

1. சுக்கு — 35 கிராம்
2. மிளகு — ,,
3. அரிதாரம் — 20 கிராம்
4. மஞ்சள் — 35 கிராம்
5. சுத்திசெய்த லிங்கம் — 20 கிராம்
6. துருசு — 15 கிராம்
7. அக்கிரகாரம் — 35 கிராம்

மருந்து செய்யும் முறை :

மேற்குறிப்பிட்டிருக்கும் மருந்து வகைகளைக் குறிப்பிட்ட விகிதப்படி எடுத்துக் கல்வத்தில் போட்டு நன்றாக அரைத்து இந்தத்தூளை ஒரு துணியில் பரப்பி திரிமாதிரி செய்து எரியவிட்டால் இந்தக்கடரிலிருந்துத் தைலம் மாதிரி வடியும். இதனை சேகரித்துப் பத்திரமாக வைத்துக் கொண்டு கீழ்க்குறிப்பிட்டிருக்கும் வியாதிகளுக்குக் கொடுக்கவும்.

உட்கொள்ளும் அளவு

ஒரு நாளைக்கு ஒரு வேளை மட்டும் 130 மில்லிகிராம் எடைவீதம் சாப்பிடவும்.

உட்கொள்ளும் காலம்

7 நாட்களுக்கு ஒரு முறை விட்டுவிட்டு அரைமண்டலம் (24 நாட்கள்) சாப்பிடவும்.

பத்தியம்

புளி, உப்பு, நீக்கவும். இருப்பினும் துவரைப்பருப்பு, அரைக்கீரை வெள்ளாட்டு உப்புக்கண்டம் உணவுடன் சேர்த்துக்கொள்ளவும். இந்த மருந்தினை உட்கொள்ளும் முன்னர் குளிர்ந்த தண்ணீரில் தலைமுழுகிவிட்டு சாப்பிடவும்.

தீரும் வியாதிகள்:-

பிரமிமேகம், பவுத்திரம், மேகவெடிப்பு, சூலை, கிரந்திப்புண் இவைகள் நிவர்த்தி ஆகும்.

குன்மம் நிவர்த்திக்கு மருந்து

அவடி மருந்து முறை 7

கள்ளிப்பால் யிந்து உப்பு-உள்ளி, பூண்டு தென்ன காயில் அடைத்து தீயில் போட்டு வேக வையித்து-புன்ன காயி அளவுஉண்டி றாய் ரெது குன்மம் மயிதுக்கு பத்தியம் பச்ச மீனைப் பிளிமாங் கிஷ்சம் தவுரவுஉ துனம் மத்துத்து தேங்காய் றெத்து கொண்டு வந்து ஓடைத்து தன்னிற் பிடாமல் பிளிந்து உள்ளி பூண்டு ரெண்டு உரித்து போட்டு யிக்கிலிவே சேர்த்து கல்லுப்பு அண்ட ரத்துப் முசி வெந்த பிறகு உப்பைத் தட்டிப் போட்டு பாலிலே கரைத்துப்பிப் படி முமுனுமுரை மத்திசகு

தேவையான மருந்துகளின் விபரம் :

1. கள்ளிப்பால் 50 மில்லி
2. இந்துப்பு 35 கிராம்
3. வெள்ளைப்பூண்டுச்சாறு 30 மில்லி

மருந்து செய்யும் முறை

இந்த மூன்று வகைகளைக் குறித்துள்ள அளவுப்படி எடுத்துக் கொண்டு ஒரு முற்றிய தேங்காய் உள்ளிருக்கும் நீரைத் துவாரம் வழியாக வடிகட்டி இந்தத் துவாரத்தின் வழியாக மேற்குறித்த மூன்று வகைகளை நிரப்பி அனலில் காண்பித்து வேகவைத்து ஆறியபிறகு இந்தத் தேங்காயை உடைத்து உள்ளிருக்கும் மெழுகு மாதிரி உள்ள மருந்தினை 2 கிராம் எடைக்குச் சாப்பிட்டு வந்தால் குன்மம் நிவர்த்தியாகும்.

பத்தியம்

பச்சைமிளகை இடித்து சூட்டு, வைத்துக் கொடுக்கலாம்

மற்றொரு முறை மருந்து :

நல்ல முற்றிய தேங்காயின் பாலை மட்டும் எடுத்துக் கொண்டு இதில் 35 கிராம் எடைக்குப் பூண்டை உரித்துப் போட்டு இத்துடன் கல்லுப்பு 10 கிராம் எடை கலந்து நன்றாகக் காய்ச்சியபிறகு கொஞ்சம் உப்புப் போட்டு பாலை நன்றாகக் கலக்கி மூன்று நாளைக்குத் தினம் 2 வேளை வீதம் சாப்பிட்டு வந்தால் குன்மவியாதி தீரும்.

மேகத்துக்குரி போதி எண்ணெயி

அவடி மருந்து முறை 8

யிர வெங்காயபூ - உ - கருஞ்சிரகம் பூ - க - கஷத்தூரி - மஞ்சல் பூ - க - வெந்தயம் பூ - க - பனை

வெல்லம் - பூ - க - பசுவினால் அரைக்க - காட்டு நுனாம் பால் அனத்து உ. விளக்கெண்ணை அரைத்து - நஉ - பளம்புளி - பூ - னா - பாது பேதி யெண்ணைபச்சை மீனும் பளத்துக் சோறு - தள்ளவும்.

விளக்கம் :

தேவையான மருந்துகளின் விபரம் :

1.	விளக்கெண்ணெய்	100 மில்லி
2.	பழைய புளி	25 கிராம்
3.	ஈர வெங்காயம்	50 கிராம்
4.	கருஞ்சீரகம்	,,
5.	கஸ்தூரிமஞ்சள்	,,
6.	வெந்தயம்	,,
7.	பனைவெல்லம்	,,
8.	பசுவின் பால்	,,
9.	காட்டுநுனா இலைச்சாறு	50 மில்லி

மருந்து செய்யும் முறை :

மேற்குறித்த வகைகளை அளவுப்படி எடுத்துக் கொண்டு இவைகளை நன்றாக அரைத்து ஒரு சட்டியில் போட்டு இத்துடன் விளக்கெண்ணெயும் ஊற்றி பால் நுனா இலைச்சார் இவைகளையும் ஒன்றாகக் கலந்து அடுப்பில் வைத்துச் செருகத்தீ மூட்டி எண்ணெய்ப்பதம் வரும் வரை காய்ச்சி வடிகட்டி வைத்துக் கொள்ளவும்.

உட்கொள்ளும் அளவு :

ஒரு நாளைக்கு ஒரு வேளைக்கு 10 மில்லி அளவு எண்ணையைச் சாப்பிடவும்.

உட்கொள்ளும் காலம் :

மூன்று தினங்களுக்கு ஒரு முறை சாப்பிடவும். இப்படி அரை மண்டலம் (24 நாட்கள்) சாப்பிடவும்.

பத்தியம் :

மீன்வகைகளையும் பழைய உணவு வகைகளையும் நீக்கவும்.

தீரும் வியாதிகள் :

வாய்வு, குடல்சுத்தம், உடல்வலி நீங்கும்.

குறிப்பு :

இந்த மருந்தைச் சாப்பிடும்போது பேதி அதிகமானால் மோர் சாதம் சாப்பிடவும். இந்தப் பேதி எண்ணெய் மேக வியாதிகளுக்கு மட்டும் உபயோகிக்கவும். சாதாரண பேதிக்கு உபயோகிக்கக் கூடாது

மலட்டுப் பூச்சி நிவர்த்திக்கும், பிள்ளை இல்லாதவர்களுக்கு கர்ப்பம் தரிக்க மருந்து

கவடி மருந்து முறை 9

பூனைப்பிள்ளை - யில்லாது பொருத்து - கூறத்து ஆவாரை பூ-க சிரகம் பூ - க - பூத கறப்பான் பட்டை பூ - க - செங்கதாரிப் பட்டை பூ - க - கொடி கள்ளி பால் - திருகு கள்ளி பால் - ருசதிர கள்ளி பால் - ணா யிர வெங்காயி படி - க வெலகது எண்ணை-ரு வெங்காயூ எண்ணை-மூனு வகை பாலையுதவு உ-கடை கறச் சறக்கை யிடித்து மூனுபடி தண்ணிராக விட்டு ரெண்டு அவகு தண்ணிறாக - யிரக்கி யிந்நாலு எண்ணை யெல்லம் விட்டு யிரவெங்காயத்தை அரிந்து போட்டு காட்சி - மெழுகு பதமாக - யிறக்கி வேலைக்கி ஒரு பிரயிளவு கடுக்கவும் பத்தியம் சுட்டிணமாகசெய்யவும், ஆறுனாள் ஒரு தேறம் குடிக்கவும் - பூ பூ விழ்ந்து போகும்.

விளக்கம் :

பொதுவாக உலகில் சில தாய்மார்களுக்குக் குழந்தைப் பாக்கியம் இல்லாமல் இருப்பது நாம் காண்கிறோம். இதற்குக் காரணம் பெண்கள் கர்ப்பப் பையில் கருவைத் தரிக்க விடாது பூச்சிகள் இருக்கின்ற காரணத்தினாலும் சில பெண்களுக்கு இயற்கையாகவே மலட்டுத்தன்மை ஏற்பட்ட காரணத்தினாலும் குழந்தைப் பாக்கியம் ஏற்படுவது இல்லை. தற்போது இதற்காகப் பல நூல்களில் வெளி வந்திருக்கும் மருந்து முறைகளைப் பற்றியும் மருந்துகளைப் பற்றியும் தெரிந்து அதன்படி கடைபிடித்தும் சிலர் பயனின்றிப் போய் விடுகின்றார்கள். இப்படியொரு நிலையைப் போக்க இந்த நூலில் குறிக்கப் பட்டிருக்கும் பழங்காலத்துச் சுவடி மருந்து முறையாகும். இதனை கீழே விளக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

தேவையான மருந்துகளின் விபரம்

1.	சூரத்து நிலாவாரை	100 கிராம்
2.	சீரகம்	35 கிராம்
3.	பூதகரம்பட்டை	,,
4.	செங்கதாரிப்பட்டை	,,
5.	கொடிகள்ளிப்பால்	50 மில்லி
6.	திருகுகள்ளிப்பால்	,,
7.	சதுரக்கள்ளிப்பால்	,,
8.	வெங்காயம்	100 கிராம்
9.	விளக்கெண்ணெய்	200 மில்லி

மருந்து செய்யும் முறை :

சூரத்து நிலாவாரையை சுத்தம் செய்துகொண்டு இதனை நன்றாக இடித்து இதில் மற்ற கடைச் சரக்குகளை யும் சேர்த்து இடித்துத்தூள் செய்து ஒரு பானையில் போட்டு நான்கு லிட்டர் தண்ணீரை ஊற்றி அடுப்பில் வைத்துக் காய்ச்சி அரை லிட்டர் அளவுக்கு இந்த கஷாயம் சுண்டும் வரை காய்ச்சி வடிகட்டி ஒரு எண்ணை சட்டியில்

ஊற்றி இத்துடன் மேல் குறிப்பிட்டிருக்கும் மூன்று விதப் பால்களையும் விளக்கெண்ணெயையும் கலந்து காய்ச்சி மெழுகு பதம் வரும்போது வெங்காயத்தைச் சிறுகச் சிறுக நறுக்கிப்போட்டுக் கிண்டி ஆறவைத்துப் பத்திரமாக எடுத்து வைத்துக் கொள்ளவும்.

உட்கொள்ளும் அளவு :

ஒரு நாளைக்கு ஒரு வேளைக்கு 5 கிராம் எடை வீதம் உட்கொள்ளவும்.

உட்கொள்ளும் காலம் :

ஆறு நாட்களுக்கு மட்டும்.

பத்தியம் :

இச்சாபத்தியம்.

குறிப்பு :

பெண்கள் வீட்டு விலக்கு ஏற்பட்ட மூன்றாம் நாள் முதல் இந்த மருந்தினைக் காலை நேரத்தில் சாப்பிட வேண்டும். சாப்பிட்ட பிறகு மூன்றுமணி நேரம் கழித்துச் சேர்த்துக்கொள்ள வேண்டிய உணவு வகைகளைச் சாப்பிட வேண்டும். வாந்தி எடுக்கக்கூடாது.

தாளிசபத்திரி குளிகை

சுவடி மருந்து முறை : 10

பத்திரி பூ - க மிளகு பூ - உ திப்பிலி பூ - அ - துவட்சி ஏ - பூ சா - எல பூ யருளுசிறாம்பு பூ யருனா - அதுவெல்லாம் பொடி செய்து சட்டிகொண்டு சரிச மண் சக்கரை கலந்து - வேரு கடிப் பிரமான் தின்னவு யிதுக்கு சயறோகம் நிப் பிறமியம்

விளக்கம் :

தேவையான மருந்துகளின் விபரம் :

1. தாளிச பத்திரி	50 கிராம்
2. மிளகு	25 கிராம்
3. திப்பிலி	,,
4. துவட்சி	,,
5. ஏலம்	,,
6. கிராம்பு	,,

இந்தச் சரக்குகளை விகிதப்படி எடுத்து நன்கு பொடி செய்து சர்க்கரை கலந்து வைத்துக்கொள்ளவும்.

உட்கொள்ளும் அளவு :

ஒரு வேளைக்கு 3 கிராம் எடை வீதம் தினம் இரண்டு வேளை.

உட்கொள்ளும் காலம் :

24 நாட்கள் சாப்பிடவும். (அரை மண்டலம்)

பத்தியம் :

வியாதிகளுக்கு ஏற்றபடி உணவு வகைகளைச் சேர்த்து நீக்கிக்கொள்ளவும்.

தீரும் வியாதிகள் :

சயரோகம், உதிரசூலை, சுவாசகாசம், பாண்டு ரோகம், சனா நோவு, சார வாய்வு, நீர் பிரமியம் இவைகள் வீழும்.

அகத்திய முனிவர் அருள்பெற்ற வைத்தியர்கள் பாடிய பாடலின் சுருக்கம்

சுவடி மருந்து முறை : 11

ஞாயித்து கிழமை தானம் செயிது ஓம் யே கரியம்
லெட்சம் செய்தூ லெட்சம் செய்தூ - தீபதூப
மதுதெது பிரத்துச சகலகற்மம் துலையும் உ. புஉ-ப்பம்-
சந்தனு - சந்து புனுகு - சவ்வாது வசாவு உ
பால் பொங்கள் - பாயஷேசம் - வடை சுண்ட ல்-வக்கவுஉ

விளக்கம் :

ஞாயிற்றுக்கிழமை நாளில் யாருக்காவது ஏதாவது ஒரு பொருளைத் தானமாகக் கொடுத்து ஓம் யே கரியம் லெட்சம் செய்தூ லெட்சம் செய்தூ என்று புஷ்பம், சந்தனம் புனுகு, சவ்வாது சாத்தி, தீபதூபம் காண்பித்து பால் பொங்கல், பாயசம், வடை, சுண்டல் செய்து நைவேத்தியம் செய்தால் சகல கர்மம் தொலையும்.
நோய் நொடி இல்லாமல் சுகமாக வாழலாம்.

லிங்கம், பூரம், வெள்ளை, வெங்காரம், கெந்தகம் இவைகளைச் சுத்தி செய்யும் முறை

சுவடி மருந்து முறை : 12

சாதிலிங்கம்-சுத்தி-பழசார்-முலைபலம்-குப்பமெனிசார்
யிது மூனு சமன் செய்து தூரண்டாக ஒருத்து குடுத்து -
சுத்தி செய்ய வு - விரத்துக்கு - பன்னீர்விட்டு - மூனு னாழி
சூறுக்கு சூடு காக சுத்தியாதம். பக உந புரம் சுத்தி
வெள்ளை சுத்தி பூரத்து சுனு வெத்திலை - முளது கூட்டி
கிழாய் வயத்து மூனுனாள் வயிந்து சிலி கட்டி - .... சு
சுத்தி யாக்கு - அமுரியில் முலை்கு அரை ...... ட போட்டு -

சிலி சிலி கட்டி சுத்தி செய்யிவு - தாளகம் சுத்திய முரியில் - கல சுண்ணாம்பில் மெனிசார் பழச்சாறு பி ... டி காலவிதம் கூட்டி கொதிக்க வக்கவு ஊடிகைக் சுத்தியாம் எடுத்து வச்சு கொள்ளவு - வெங்காரத்துக்கு அமுரியில் முனால் நனையய் வுக்கவு - சுத்தியாச்சு கெந்தகம் சுத்தி ஆவுன வெண்ணை ...... உருக்கி யிரும்பில் யிரத்து தீரும் சாளை அதிகமா சுத்தியச் ...... சே உ.

விளக்கம்:

1. சாதிலிங்கம் சுத்தி செய்யும் முறை :

தேவையான சாதிலிங்கக் கட்டியை எடுத்துக்கொண்டு ஒரு நாள் முலைப்பாலில் ஊறவைத்து எடுத்துக்கொண்டு எலுமிச்சம்பழச்சாறு, குப்பமேனிச்சாறு, முலைப்பால் இவைகளைச்சமன் அளவு எடுத்துக்கொண்டு ஒரு மண் ஓட்டில் லிங்கக்கட்டியை வைத்து லேசான தீயிட்டு இந்த லிங்கத்தின்மீது பழச்சாறு, குப்பமேனிச்சாறு, முலைப்பால் இவைகளைக் கலந்து வைத்திருப்பதை லேசாக விட்டு விட்டுச் சுருக்குக் கொடுத்தால் லிங்கசுத்தி லிங்கக் கட்டி ஆகும்.

2. வீரம் சுத்தி செய்யும் முறை :

தேவையான வீர கட்டியை ஒரு மண் ஓட்டில் வைத்து லேசான தீயிட்டு இந்த வீரத்தின் மீது சிறுகச்சிறுக பன்னீர் விட்டு மூன்று நாழி சுருக்குக் கொடுத்தால் சுத்தியாகும்.

3. பூரம் சுத்தி செய்யும் முறை :

மிளகு, வெத்திலை இவைகளைச் சமன் அளவு எடுத்து கியாழமிட்டு அதில் கிளிக்கட்டி, மூன்று நாட்கள் பூரத்தை ஊறவைத்து எடுத்துக் கொண்டால் சுத்தியாகும்.

4. வெள்ளை சுத்தி செய்யும் முறை :

அமுரியில், (சிறுநீரில்) மிளகை அரைத்துப்போட்டு கிளிக்கட்டி மூன்று நாட்கள் வெள்ளையை ஊறவைத்து எடுத்துக் கொண்டால் சுத்தியாகும்.

5. தாளகம் சுத்தி செய்யும் முறை :

தாளகத்தை சுண்ணாம்புக்குள் வைத்துக் கழுதை மூத்திரம் விட்டு ஏழுதடவை தாளித்து எடுத்து சுன்னநீர் கொள்ளுக் கியாழம் தயிர், பூசினிக்காய், நீர்காடி, அகத்திக் கீரைவிரைதைலம் இவைகள் சமன்அளவு எடுத்துக்கூட்டி இரண்டு சாமம் சுருக்குக் கொடுத்தாலும் சுத்தியாகும்.

6. வெங்காரம் சுத்தி செய்யும் முறை :

வெங்காரத்தை நெருப்பில் பொரித்து எடுத்துக் கொண்டாலும் சுத்தியாகும். அல்லது எலுமிச்சம்பழ ரசத்தில் அரைத்து வில்லை தட்டிக் காயவைத்துக் கொண்டாலும் சுத்தியாகும்.

7. கெந்தகம் சுத்தி செய்யும் முறை :

ஆவின் வெண்ணையில் உருக்கிச் சாய்த்து எடுத்துக் கொண்டால் கெந்தகம் சுத்தியாகும்.

8. ரசம் சுத்தி செய்யும் முறை :

ரசத்தை அருகம்பாலில் ஒரு நாள் ஊரவைத்து செங்கத் தான் கொட்டை சர்க்கரை இதுகளில் அரைத்து எடுத்துக் கொண்டால் சுத்தி ஆகும்.

இரண்டாவது முறை

ரசத்தை அளவுப்படி எடுத்து மஞ்சள், செங்கல் இவை களுடன் சேர்த்து அரைத்துத் துணியில் வடிகட்டிக் கொண்டால் (துணியில் முடித்துப் பிழிந்து கொண்டால்) சுத்தி ஆகும்.

நாசியில் போடும் மருந்து

சுவடி முறை 13

வு - சுத்தி பாக்கு - நசிய விநோதம் வெள்ளைப் பாஷ சாணு வீ - ங வெள்ளறுக்கம் பாலிலே மூலுனாளூறப்

போட்டு ஆறானாளப் பாத்துலே அரைத்து சிறுப் பயறுப் பிறமாஹு உண்டை பண்ணி நிழல ஹுணத்தி முக்கல பாலிலை - யெழைத்து ஒரு பிறத்து நாசியில் விடவு -

துரு சு சுத்தி

ஒரு பிறசுரம் நித்தம் முறு பிறத்திலும் நாசியிலிட்டால் யிரு பிறத்து சுரமும் விட்டும் யிது கையி கண்டது - யெதிரி வயித்தியனெ வெல்லாம் உ துருசூகொமியத்தில் ஒரு னாலேயுலேகம் வி போடவு.

விளக்கம் :

அளவுப்படி சுத்தி செய்த வெள்ளை பாஷாணத்தை வெள்ளை எருக்கம்பாலில் மூன்று நாட்கள் ஊறவைத்துப் பிறகு அதனை ஆறு நாட்கள் கழித்து அரைத்துச் சிறு பயறு மாதிரி உருண்டைகளாகச் செய்து நிழலில் காயவைத்துக் கொண்டு அதனை முலைப்பாலில் உரைத்து ஒரு நாசியில் நடவிச் கொண்டால் பிறசுரம், நித்தம் இருபக்கத்திலும் நாசியில் இட்டுக்கொண்டால் இருபக்க நாசியும் திறந்து அனைத்து ஜுரமும் தீரும். இது ஒரு கைகண்ட மருந்தாகும்

துருசு சுத்தி செய்யும் முறை

சுவடி மருந்து முறை 14

துருசூ கொமியத்தில் ஒரு னாலேயுலேகம்
வி போடவு

விளக்கம் :

தேவையான துருசு துண்டைப் பசுவின் கோமியத்தில் ஒரு நாள் ஊறவைத்து எடுத்துக்கொண்டால் சுத்தியாகும்.

இரண்டாவது முறை

தயிரில் ஒரு ஜாமம் துருசை ஊறவைத்து எடுத்துக் கொண்டால் துருசு சுத்தியாகும்.

மூன்றாவது முறை :

துருசைத் தயிரில் அரைத்துக் காயவைத்த ஓட்டில் போட்டு பிரட்டி எடுத்துக்கொண்டாலும் சுத்தியாகும்.

மேகவாயுவுக்குச் சூரண மருந்து

கடைச் மருந்து முறை : 15

பறங்கிபட்டை
சித்தரத்தை
பிறப்பன்கிழங்கு
சுக்கு கிராம்பு
வாயு விளங்கம்
சக்கரை
பரப்பாடி சமன் துட்டு
சாப்புடவு - பூ
புளிவேயிலை - தல்லவு.

தேவையான மருந்துகளின் விபரம் :

விளக்கம் :

1.	பறங்கிப்பட்டை	35 கிராம்
2.	சித்தரத்தை	"
3.	பிரப்பன்கிழங்கு	"
4.	சுக்கு	"
5.	கிராம்பு	"
6.	வாய்விளங்கம்	"

மேற்படி கடைச்சரக்குகளை நன்றாகக் காயவைத்துக் கல்லுரலில் போட்டு நன்கு இடித்துத் தூள் செய்து துணி கொண்டுச் வடிகட்டிக்கொண்டு இந்தச்சூரணத்துடன் இரண்டு பங்கு சர்க்கரை, கலந்து சுத்தமான பாட்டிலில் வைத்துக் கொள்ளவும்.

உட்கொள்ளும் அளவு:-

5 கிராம் எடை வீதம் இரண்டு வேளை காலை மாலை

உட்கொள்ளும் காலம் :

48 நாட்கள் சாப்பிடவும். (ஒரு மண்டலம்)

பத்தியம்:-

புளியில்லாமல் சாப்பிடவும்.

தீரும் வியாதிகள் :

அனைத்து மேகவாய்வுகள் தீரும்.

கடுக்காய் லேகியம்

செய்முறை : 16

கடுக்காய் - பூ - க - கிஷாயம் வய்த்து யிடித்து தொன்றி தாளியில் குள்ளே போட்டு சுத்த சிகல யெட்டு மரக்கால் குநிர் வுட்டு யொண்டா காச்சி - சிவதை வேர் இஞ்சி - முளகு - யெலம் - கடுக்காயம் - திப்பிலி - அரைத்துப் போட்டு பாகு போலே வத்திய போது நெய்யே விட்டு கிண்டி புன்னைகாய் யளவு சாப்புடவு - அக்கினி மற்றும் நூலை - கொபூ கிண்ட மலசலங்கள் கூறிய வாய்வு பத்தும். மூலமாறம் - தீரும். நெல்லி காயி கூற - தூ ணிநீர் யெண்ட்டு ஒண்டாக காச்சி தாளியில் வுட்டு திப்பிலி மூன்கு சுக்கு ஓம் கிறாம்பு குநிக்குல - வாய் விழுங்கம் சீரகம் - மல்லி துகைநீர் - அதிமதூரம் - பூ க சக்கரை பூ - ய கரைத்துக் கொண்டு கி பூ யத்தில் அரைத்து காச்சி ஒரு படி நெய்யை வாத்து கிண்டி கிண்டி மெழுகா வாங்கி பாத்து அவளது கொள்ளவு உ.

விளக்கம்:

தேவையான மருந்துகளின் விபரம் :

1.	கடுக்காய்	200 கிராம்
2.	சிவதை வேர்	70 கிராம்
3.	இஞ்சி	50 கிராம்
4.	மிளகு	25 கிராம்
5.	ஏலம்	,,
6.	திப்பிலி	,,
7.	கடுக்காய் (பிஞ்சு)	50 கிராம்.

லேகியம் செய்யும் முறை :

கடுக்காயை எடுத்து நன்கு தட்டி மேல் தோல் மட்டும் எடுத்துக்கொண்டு இதனை ஒரு பானையில் போட்டு 4 லிட்டர் தண்ணீர்விட்டு அடுப்பில் வைத்துக் காய்ச்சி ½ லிட்டர் வந்தவுடன் இறக்கி வடிகட்டிக்கொண்டு இந்தக் கியாழத்தில் மேற்சொன்ன கடைச்சரக்குகளை நன்றாக அரைத்து ஒரு சட்டியில் சர்க்கரைப் பாகு செய்து இதனைப் போட்டு நன்கு கிண்டி மெழுகுப் பதம் வந்தவுடன் இறக்கி நெய்விட்டுக் கிண்டி ஆறியபிறகு ஒரு பாட்டிலில் எடுத்து வைத்துக் கொள்ளவும்.

உட்கொள்ளும் அளவு

5 to 10 கிராம் எடை வீதம் தினம் இரண்டு வேளை.

உட்கொள்ளும் காலம்

48 நாட்கள். (ஒரு மண்டலம்)

பத்தியம் ;

வாய்வு உணவுகள் நீக்கவும். வயிற்றுப்போக்கு உண்டாகும் படியாக உள்ள உணவு வகைகளை நீக்குவது நல்லது.

தீரும் வியாதிகள்:

அக்கினி மந்தம், சூலை, வாய்வு பத்து, மலச்சிக்கல், மூலக்கடுப்பு இவைகள் தீரும்.

மிளகு லேகியம்

சுவடி மருந்து முறை 17

முலகு பூ-க- தூனி நீரில் போட்டுயெட்டு ஒண்டாக் காச்சி கல்கண்டு பூ-ய-கிஷ காச்சி பாகுது போலே முன்னே அரத்தை அக்கிற காரகம்- சீரகம்-கிறாம்பு - ஏலம் - கோஷ்டம்- அதிமதுரம் - கெந்தகம் - வாயிவிளங்கம் - கண்ட குப்பி- வகைக்கி- பூ-க-பொடித்து கொண்டு ரசியில் தூவி கிண்டி மெழுகு பதத்தில் நெயினாழி தெணலி-பதமா கிண்டி பின்ன காயி வளது சாப்புடவு கிரமப்பணும் தொன்லூ காரம் கபங்கள் நீர்தோஷம் சில விழும் சுரங்குள வாதம் தீரும் - வாய்வு வாங்கு தானே.

விளக்கம்:

தேவையான மருந்துகள் விபரம்:

1. மிளகு	100 கிராம்
2. அரத்தை	35 கிராம்
3. அக்கிரகாரம்	,,
4. சீரகம்	,,
5. கிராம்பு	,,
6. ஏலம்	35 கிராம்
7. கோஷ்டம்	,,
8. நறுக்கு மூலம்	,,
9. அதிமதுரம்	,,
10. வாய்விளங்கம்	,,
11. கண்டதிப்பிலி	,,
12. ஜாதிபத்திரி	35 கிராம்.

லேகியம் செய்யும் முறை :

மிளகை அளவுப்படி எடுத்துக்கொண்டு இதனை ஒரு துணியில் முடிந்து கொண்டு ஒரு பானையில் போட்டு இதில் நான்கு லிட்டர் தண்ணீரை விட்டு அடுப்பில் வைத்துக்காய்ச்சி அரை லிட்டர் வந்தவுடன் வடிகட்டிக் கொண்டு மேற்குறிக்கப்பட்டு இருக்கும் கடைச்சரக்குகளை இந்த கிஷாயத்தை விட்டு நன்கு அரைத்துக்கொண்டு ஒரு சட்டியில் தேவையான கற்கண்டைப் போட்டு லேசான தீயிட்டுப் பாகு செய்து இதில் மேல் அரைத்து வைத்திருக்கும் மருந்து வகைகளைப் போட்டு நன்றாகக் கிண்டி, மெழுகு பதம் வந்தவுடன் இறக்கி இதில் தேன், நெய் விட்டுக்கிண்டி பாட்டிலில் வைத்துக் கொள்ளவும்.

உட்கொள்ளும் அளவு :

வேளைக்கு 10 கிராம் எடை வீதம் தினம் இரண்டு வேளை சாப்பிடவும்.

உட்கொள்ளும் காலம்

24 நாட்கள் சாப்பிடவும். (அரை மண்டலம்)

பத்தியம்:

வாய்வு, உணவு, வகைகள், வாழைக்காய், உருளைக் கிழங்கு, பறங்கிக்காய், சர்க்கரைவள்ளிக்கிழங்கு, மொச்சைக் கொட்டை, இவைகளை நீக்கவும்.

தீரும் வியாதிகள்:

கபம், நீர்தோஷம். சில்விஷம், வாதம், வாய்வுகள் சிலேத்துமரோகம் இவைகள் தீரும்.

குறிப்பு:

இந்த மருந்தினை உட்கொள்ளும்போது அதிகப்படியான காரசம்மந்தப்பட்ட உணவுகளையும் அதிகப் புளிப்பு இல்லாத உணவு வகைகளை உட்கொள்ளுவது மிகவும் நல்லது.

வெள்ளைப்பூண்டு லேகியம்

சுவடி மருந்து முறை 18

உள்ளிப்பூண்டு பூ - ள - பச்சதன்னி யெட்டு மரக்கால் யெட்டு ஒண்டா காச்சி காயம் சுக்கு வால்முளகு யிந்து உப்பு ஓமம் - ஏலம், திப்பிலி முளகு - சீரகம் - திரிபாலை வேர்ப்பாலை அதிவிடைய விரய விளங்கம் கூட்டி வகைக்கி பூ - க - கூட்டி யிடித்து சினியோடே உ பாது செய்து - படிவு தெய் படி கால் விட்டு கிண்டி முழுகு பதத்தில் யெடுத்து பின்னை காயளவு சாப்பிட நீரு விசாதி வாயுமு வாதம் குமம் யொட்டும் அன்னம் யெடுக்கும் - அகண்டு ரோம நொய்யிகள் வெள்ளாம்.

வினக்கம்

வெள்ளைப்பூண்டு என்பது வீட்டில் அனைவரும் உபயோகிக்கும் உணவு வகை சார்ந்தது. பெரும்பாலும் அக்காலத்தில் சுவடிகளிலும் பல நூல்களிலும் வீட்டில் அதிகமாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். இந்தப் பூண்டின் குணம் ரத்தத்தில் இருக்கும் கொழுப்பை நீக்குகிறது. உடலில் வாய்வு தொந்தரவுகளையும் ஜீரணத் தொந்தரவுகளையும் நீக்குகிறது. இருப்பினும் குழந்தை பிறந்த தாய்மார்களுக்கு நாட்டுக்காயம் என்ற மருந்தில் இந்தப் பூண்டினைதான் அதிகமாகப் பயன்படுத்தி மருந்து செய்திருக்கிறார்கள். இந்தப்பூண்டு அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் வயிற்றுப்பொருமல். உதிரச்சிக்கல் உடல்கனம், ரத்தம் சீரமைப்பு இவைகளுக்கு மிக ஏற்றதாகும். நாம் உண்ணும் உணவில் வாரத்திற்கு இரண்டு முறை பூண்டு ரசத்தை வைத்துச் சாப்பிட்டு வந்தால் உடலில் குடல்வாய்வு, தங்க வாய்ப்பில்லை. இத்தகைய சக்திவாய்ந்த பூண்டை லேகியமாகச் செய்யும் முறையைக் கீழே மிக விரிவாகவும் விளக்கமாகவும் கொடுக்கப்பட்டுள்ளது.

வெள்ளைப்பூண்டு லேகியம்

தேவையான மருந்துகளின் விபரம் :

1.	பூண்டு	200 கிராம்
2.	பெருங்காயம்	,,
3.	சுக்கு	,,
4.	வால்மிளகு	,,
5.	இந்துப்பு	,,
6.	ஓமம்	,,
7.	ஏலம்	,,
8.	திப்பிலி	,,
9.	மிளகு	,,
10.	சீரகம்	,,
11.	திரிபாலை	,,
12.	வெட்பாலை அரிசி	,,
13.	அதிவிடையம்	,,
14.	வாய்விளங்கம்	,,

லேகியம் செய்யும் முறை :

வெள்ளைப்பூண்டைக் குறித்த அளவுப்படி எடுத்துக் கொண்டு நன்றாக இடித்து ஒரு பானையில் போட்டு நான்கு லிட்டர் தண்ணீர் ஊற்றி அடுப்பில் வைத்து 500 மில்லி அளவு வரும் வரை சுண்டக்காய்ச்சி இதனை வடிகட்டிக்கொண்டு இத்துடன் தேவையான அளவுக்கு ஜீனியைக் கலந்து காய்ச்சிப் பாகு செய்து கொண்டு மேற்படி கடைச் சரக்குகளை இடித்துத் தூள் செய்துதுணி கொண்டு வடிகட்டி இந்தச் சூரணத்தை மேற்படி பாகில் போட்டு நன்றாகக் கிண்டிமெழுகு பதம் வந்தவுடன் நெய்யை ஊற்றி நன்கு கிண்டி ஆறினபின் பாட்டிலில் வைத்துக்கொள்ளவும்.

உட்கொள்ளும் அளவு :

தினம் வேளைக்கு 10 கிராம் விதம் இரண்டு வேளை சாப்பிடவும்.

உட்கொள்ளும் காலம்

48 நாட்கள் ஒரு மண்டலம் சாப்பிடவும்.

பத்தியம்

காரமான உணவு வகைகளையும் வாய்வு உணவு வகைகளை நீக்கவும்.

தீரும் வியாதிகள் :

வாய்வுகள், குன்மம் எட்டு, பசி இன்மை இவைகள் நிவர்த்தியாகும்

ஓம லேகியம் செய்யும் முறையும் இதன் உபயோகமும்

சுவடி மருந்து முறை 19

ஓமம் - பூ - தன்னின் மெட்டு மரக்கால் யெட்டி
ஒன்னா காச்சி சக்கரை பூ-ய பாது செயிது-அழு கதுள
வேர் - துகரிலு சீனப் பாறுமதர் கொலம்பூ - க -
வறக்கரி பால் மக இயிடித்து சூரணம் செயிது நறுநெயி
நாளி-கலஞ்சு விதம்-மண்டால் கொல்ல - பறங்கி சூவை
சிரங்கு குஉ - மதரங்கிய கிரந்தி புணங்கள் சார்ந்திடு
சில விபூங்கள வாய்வு - வாதம் போகும் உ.

விளக்கம்

ஓமம் சிறு குழந்தை முதல் பெரியவர் வரை உபயோகிக்கக்கூடிய ஒரு வஸ்தாகும். இந்த ஓமத்தில் இருக்கக்கூடிய ஒரு சிறப்புக் குணம் அஜீரணத்தைப் போக்கும். வாந்தியை நிறுத்தக்கூடிய அளவிற்கு இந்த ஓமத்தில் சிறப்பு உள்ளது.

இந்த ஓமத்தை ஓமத்திராவகம் தயார் செய்யலாம். சிறு குழந்தைகளுக்கு உரைமருந்து தயார் செய்வதற்கு பயன்படுகிறது. அதுமாதிரி பல லேகியங்களுக்கும் பயன் படுகிறது. கஷாயத்திற்கும் பயன்படுகிறது. இதுமாதிரி லேகியம் செய்வதற்கு அக்காலத்திலிருந்தும் இக்காலத் திலும் மருந்து வகைகளில் சேர்த்துச் செய்து இருக்கும் முறையைவிட இச்சுவடியில் மிகச் சிறந்த முறையைப்பற்றி அக்காலத்துச் சித்தர்கள் எழுதி வைத்திருந்தார்கள். இந்த மருந்து முறையை இக்காலத்து மக்களுக்குப் பயன்படச் செய்ய வேண்டும், என்பதற்காக இந்த நூலில் ஓமலேகியத் தைச் செய்யும் முறையைப்பற்றியும் இதனால் தீரும் வியாதி களைப்பற்றியும் கீழே மிக விளக்கமாகக்கொடுக்கப் பட்டுள்ளது.

ஓம லேகியம் செய்யும்முறை

தேவையான மருந்துகளின் விபரம்:

1. ஓமம் 200 கிராம்
2. அமுக்கிராங்கிழங்கு 70 கிராம்
3. சுக்கில் ,,
4. பரங்கிப்பட்டை ,,
5. கார்கோலரிசி ,,

லேகியம் செய்யும் முறை :

ஓமத்தைத் தேவையான அளவு எடுத்துக்கொண்டு ஒரு துணியில் முடிந்து ஒரு பானையில் போட்டு நான்கு லிட்டர் தண்ணீர்விட்டு அடுப்பில் வைத்து நன்றாகக் காய்ச்சி 500 மில்லி (½லிட்டர்) வரை சுண்டக்காய்ச்சிப் பிறகு இதனை வடிகட்டிக் கொண்டு இதனை ஒரு சட்டியில் ஊற்றித் தேவையான அளவு சர்க்கரையைக் கலந்து பாகு செய்து மேலே குறிக்கப்பட்டிருக்கும் கடைச் சரக்குகளை இடித்து தூள்செய்து துணிகொண்டு வடிகட்டி, இந்தச் சூரணத்தைச் பாலில் தூவி, கிண்டி மெழுபதம் வந்தவுடன் இறக்கி

நெய்விட்டுக் கிண்டி ஆறியபிறகு எடுத்துப் பாட்டிலில் வைத்துக் கொள்ளவும்.

உட்கொள்ளும் அளவு

ஒரு வேளைக்கு 15 கிராம் வீதம் காலை, மாலை சாப்பிடவும்.

உட்கொள்ளும் காலம்

ஒரு மண்டலம் சாப்பிடவும்.

பத்தியம்

வியாதிக்கு ஏற்றபடி உணவைச் சேர்த்து நீக்கிக் கொள்ளவும்.

தீரும் வியாதிகள்:-

பரங்கிக்ருலை, கிரங்கு, கிரந்திப்புண்கள், வாய்வு, வாதம், சந்துவாதம், பிடிப்புவாய்வு, அஜீரணவாய்வு, குடல்வாய்வு தீரும்.

பெருங்காய லேகியம்
செய்யும் முறையும் உபயோகமும்

சுவடி மருந்து முறை 20

காயம் - பூ உயரு - துணி நிலயெட்டு யொண்ட காச்சி சீனி பூய - பாது செயிது - வெள்ளைப் பூண்டு-கடுகு சுக்கு முளது திப்பிலி - ஓமம் சீரகம்-மதுரம் கோஷ்டம்- வக்கரி யிதடித்து பொடி செய்து போட்டு ஆவின் நெய் கால்படி சிண்டி மெழுகு பதத்தில் - கலஞ்சு யிந்த அவில் துசாப் புடவும். வாயுவு வாதம் - போதும் - பத்தியம் - மிளகு - மஞ்சள் - சீரகம் யிது சேத்துக் கொள்ளவும். முருங்கைப் பிஞ்சு கத்தரிப்பிஞ்சு முலைக்கீரை - அரைக்கீரை - பால் நெய் சேர்க்கவும்.

விளக்கம் :

தேவையான மருந்துகளின் விபரம் :

1.	பெருங்காயம்	50 கிராம்
2.	வெள்ளைப்பூண்டு	,,
3.	கடுகு	,,
4.	சுக்கு	,,
5.	மிளகு	,,
6.	திப்பிலி	,,
7.	ஓமம்	,,
8.	சீரகம்	,,
9.	அதிமதுரம்	,,
10.	கோஷ்டம்	,,
11.	நெய்	200 கிராம்

லேகியம் செய்யும் முறை :

தேவையான பெருங்காயத்தை எடுத்துக்கொண்டு ஒரு துணியில் முடிந்து இதனை ஒரு பானையில் போட்டு நான்கு லிட்டர் தண்ணீரை ஊற்றி அடுப்பில் வைத்து அரை லிட்டர் வரும்வரை காய்ச்சி இதனை வடிகட்டி ஒரு சட்டியில் ஊற்றித் தேவையான அளவு சீனியைப் போட்டுப் பாகு போல் காய்ச்சி மேல் குறிக்கப்பட்டிருக்கும் கடைச்சரக்குகளை இடித்துத் தூள் செய்து வடிகட்டிக் கொண்டு இந்தச் சூரணத்தை மேற்படி பாகு சட்டியில் போட்டுக் கிண்டி மெழுகுபதம் வந்தவுடன் இறக்கி ஆறியபிறகு நெய்யை ஊற்றிப் பிசைந்து ஒரு பாட்டிலில் வைத்துக் கொள்ளவும்.

உட்கொள்ளும் அளவு:-

தினம் ஒரு வேளைக்கு 10 கிராம் எடை வீதம் சாப்பிடவும்.

உட்கொள்ளும் காலம் :

24 நாட்கள் சாப்பிடவும்.

தீரும் வியாதிகள் :

அனைத்து வாய்வு சம்மந்தப்பட்ட வியாதிகளும் தீரும்.

பத்தியம் :

வாய்வு உணவு வகைகளை நீக்கவும்.

சேர்த்துக்கொள்ளக்கூடிய உணவுகள் :

மிளகுரசம், அரைக்கீரை, பால், நெய் இவைகளைச் சேர்த்துக் கொள்ளலாம்.

சுரத்துக்குளிகை (சுரத்துக்கு மாத்திரை மருந்து)

சுவடி மருந்து முறை : 21

வெள்ளை காகாண் மவா மிளகு பிந்துப்பு-பித்து நரிக்கி
முலைப்பாலில் நசிய மடை சந்த குகார் சன்னிய
வாதசுரம் அபி காத சுரம் மாறல் குளிர் விடும்.

விளக்கம் :

பொதுவாக சீதோஷ்ண நிலை மாறுபட்டாலும் சில உணவு வகைகள் மாறுபட்டாலும் காய்ச்சல் வரும். இத்தகைய காய்ச்சல்களில் பல வகை உண்டு மேலும் பலவகைக் காரணங்களினாலும் காய்ச்சல் வரும். கீழ்க்குறிக்கப் பட்டிருக்கும் மருந்து சாதாரண காய்ச்சலுக்குப் பயன் படுத்தலாம்.

தேவையான மருந்துகளின் விபரம்:

1.	வெள்ளை காக்கரட்டான் வேர்,	30 கிராம்
2.	மிளகு	10 கிராம்
3.	இந்துப்பு	,,
4.	முலைப்பால்	தேவையான அளவு

மேற்குறிக்கப்பட்டிருக்கும் வெள்ளைக் காக்கரட்டான் வேர்ப் பட்டைகளை மட்டும் சுத்தம் செய்து எடுத்துக் கொண்டு இத்துடன் மற்ற மிளகு இந்துப்பு இவைகளைச் சேர்த்து முலைப்பாலை விட்டு அரைத்துச் சிறு உருண்டைகளாகச் செய்து நிழலில் காயவைத்துக் கொள்ளவும்.

உட்கொள்ளும் அளவு :

தினம் 3 வேளை (3 மாத்திரை) வேளைக்கு ஒரு மாத்திரை விதம் சாப்பிடவும்.

உட்கொள்ளும் காலம் :

காய்ச்சல் நிற்கும் வரையில் சாப்பிடவும்.

தீரும் வியாதிகள் :

அஸ்தி சுரம், அந்தி சுரம், நாள்பட்ட சுரம் இவைகள் தீரும்.

பத்தியம்:-

அரிசிக் கஞ்சி சாப்பிடவும்.

மதன காம சுரக்க லேகியம்

சுவடி மருந்து முறை : 22

சாதிகாயி	வீ ...	க	திப்பிலி	பூ	ரு
			பச்சை	பூ	வ
கிராம்பு	வீ ...	ரு	ஆவின்	பூ	க
ஏலரிசி	வீ ...	ரு	சிறுநெருஞ்சி		
கருவாப்பட்டை	வீ	ரு	சமூல்முலை	பூ	க
மதன்காமிக்கு	வீ	உ	விரயி விளங்கம்	பூ	ங
பெருமஞ்சீரகம்	வீ	க	சிறுகைப்பூ	பூ	உ
சந்தனம்	வீ	உ	வில்வபத்திரி வேர்	பூ	ச
வெட்டிவேர்	வீ	உ	முருங்கைப்பூ	பூ	அ
விலாமிச்ச வேர்	வீ	ச	தாளிச பத்திரி வேர்	பூ	வ
தானி காயி	வீ	கு	வங்கால சுல்கண்டு	பூ	யசா
கஷக் கசா	வீ	ச	தேன்	பூ	அ
நீர்முள்ளி விரை	வி	உ	முத்தல்காசு	பூ	ரு
கோஷ்ட்டம்	சீ	ரு	அதிவிடையம்	வீ	உ
சாவாய் சீறி	வீ	உ	அதிமதுரம்	வீ	உ
			அருக்கான தண்டு	பூ	அ
ருமசத்து	வீ	க	சிலியுரல்பட்டை	வீ	உ
நீலைபனைக்கிழங்கு	பூ	உ	கஸ்தூரிமஞ்சள்	வீ	உ
தன்னீர்மிட்டான கிழங்கு		உ	ஆவின் நெய்		ங
பூமிக் கூரை கிழங்கு	பூ	க	அமுத்தாள் கிழங்கு	பூ	ச
சின்னி கிழங்கு	பூ	ச	சந்தன அத்தர்	வீ	உ
சுக்கு	பூ	க	மருக்கொழுந்து	வீ	க
மிளகு	பூ	க	வேர்ப்பாலை அரிசி	வீ	க
			கொத்தமல்லி	வீ	

சாற்று முனுகு வீ	க	கடல் பாசி பூ	க
சித்தரத்தை வீ	உ	கஞ்சா வீ	ரு
நன்னாரிவேர் வீ	ச	ஆ சாற்றுகள்	ருயக

பிந்த சரத்து கள்ளில் தன்னில் மட்டான சிறுநெரிஞ்சி வில்வ பத்திரி அருகன் தண்டு யிந்த சரக்குனாலு கிஷாயம் தன்னி யெட்டுலுண்டாயி காச்சி - அபினெ ஒரு சிறு கிண்ணத்தில் ஒரு முட்டை சுரண்டியினாலே தண்ணீர் விட்டு கறச் கரியின் நெருப்பின் பேரில்வயித்து கொதிப் பித்துஎதிரம் - சீலை வடிகொண்டு சுத்தி யாணத்தை எடுத்து வயித்து கொள்ளவு - அபின்கசப்பு மாரியிருத்தும் யிதுசுத்தி உ முருங்கைப்பூ மலர்ந்த காய் குணரத்து வெள்ளை மலரானதை எடுத்துக்கொண்டு நடுவில் யிருத் துறு மஞ்சளரி மாயிருத்து ... சையும் காம்பு அடிபச்சை நிர முலை தள்ளி போடவும், சாத்து புறைமெ நறுக்கி ச - பாலில் விட்டு யிலிநீ திறவி காச்சவும். வடிகட்டிக் கொள்ள வும். மற்றும் சாலா மிசிறியு தூள் பண்ணி வைய்த்துக் கொள்ளவு-கடல் பாசிய்யே தூள்பண்ணி வச்சு கொள்ளவு கஞ்சா விரை போக்கி போட்டு பாலில் முப்பது னாழிகை ஊறப்போட்டு பாலிலே யிருத்து போட்டு வதங்க நிழல் லுணத்தி - நெயிலி விட்டு யெலை கறுகாமல் காச்சி - நெய்யிலே இருத்து கொள்ளவும். கல்கண்டு தூள் பண்ணி போடவும். அத்தர ஒன்று தவுர ... க சரக்குகள்யெல்லாப் காய வயித்து யிடித்து வஷ்சிறகாயம் பன்னி வடிகட்டி கொள்ளவும். முன்சொன்ன சூரணத்தையு கய்யில் தடவி நொசுந்தால் புது குண்டி சட்டுயயே கழுவியிரம் காய வயித்து சட்டி யுல்லே நெயி தடவி - அடுப்பு யேத்தி - முற்றின கிழாயத்தை விட்டு ச பால் வட்டு கொதிக்கிற பத்த வத்திலே முருங்கை பூவும் கடலினுரையு மரிரு முற்றும் போட்டு துறுவவு மரு கொதியில் பூரு வடித் திருந்த தயிலம் விட்டு துருவவும். யிதரத்துடுபமு செய்து கொள்ளவும், போட்ட சரத்துகள் ளெல்லாம் கறைந்து

பொன் பிரப்பிடு பீங்கான் பேரில் கொஞ்சம் குத்திப் பாத்தால் அலுவாப்போலே உறைஞ்சு போகும். அந்த பதம் கண்டு சூரணத்தை கொஞ்சம் கொஞ்சமா போட்டு கிண்டவு. சேறுபதமான பிற்பாடு கஞ்சா எண்ணயியை மட்டாயிடவும். கிளறி உருட்டி தின்றால் - கசப்பா யிருக்கும், தேனை விட டுக் கிண்டினால் யிலகி நிற்கும். சுல்கண்டு தூள் போட்டு கிண்டவும். சுடுப்புடன் சட்டியில் ஓட்டி கொள்ளும். பிசின் பதமானால் திண்டு பாற்கவும், ஆனந்தமானலசம் மாயியிருத்தும் யிப்பேர்ப்பெத்த லேகியம் வேலைக்கு முக்கால வீ கன்னிடை அத்திசந்தி சாப்பிடவும். உ. யிக்கும ஒண்டுயில்லை.

விளக்கம் :

தேவையான மருந்துகளின் விபரம்:

1.	சாதிக்காய்	35 கிராம்	14.	சாலாமுசிறி	35 கிராம்
2.	கிராம்பு	,,	15.	ரூமஸ்தகிரி	,,
3.	ஏல அரிசி	,,	16.	நிலப்பனைக்கிழங்கு	,,
4.	கருவாய்ப்பட்டை	,,	17.	பூமிசக்கரைகிழங்கு	,,
5.	மதன் காமிக்கு	,,	18.	தண்ணீர்மிட்டாக் கிழங்கு	,,
6.	பெருஞ்சீரகம்	,,	19.	சின்னிகிழங்கு	,,
7.	சந்தனம்	,,	20.	சுக்கு	,,
8.	வெட்டிவேர்	,,	21.	மிளகு	,,
9.	விலாமிச்சவேர்	,,	22.	திப்பிலி	,,
10.	தான்றிக்காய்	,,	23.	வங்காளபச்சை	,,
11.	கசகசா	,,	24.	ஆவின்பால்	1 லிட்டர்
12.	நீர்முள்ளிவிரை	,,	25.	சிறுநெருஞ்சி சமூலம்	50 கிராம்
13.	கோஷ்டம்	,,	26.	வாய்விளங்கம்	,,

27. சிறுநாகப் பூ 35 கிராம்
28. வில்வபத்திரிவேர் ,,
29. முருங்கைப்பூ 100 கிராம்
30. தாளிசபத்திரி ,,
31. வங்காள கற்கண்டு 350 கிராம்
32. தேன் 200 கிராம்
33. முத்தக்காசு ,,
34. அதிவிடையம் ,,
35. அதிமதுரம் ,,
36. அருகன் தண்டு 50 கிராம்
37. கிலியூரன் பட்டை ,,
38. கஸ்தூரி மஞ்சள் 35 கிராம்
39. ஆவின் நெய் 200 கிராம்
40. அமுக்கிராண் கிழங்கு ,,
41. ரத்தன அந்தர் ,,
42. மருக்கொழுந்து ,,
43. வேட்பாலை அரிசி ,,
44. கொத்தமல்லி ,,
45. சாற்று முனுகு ,,
46. கடல்பாசி ,,
47. சித்தரத்தை ,,
48. கஞ்சா ,,
49. நன்னாரி வேர் ,,

இதில் குறிக்கப்பட்டு இருக்கும் மருந்து வகைகளில் தண்ணீர்விட்டான்கிழங்கு, சிறுநெரிஞ்சி சமூலம், வில்வபத்திரி, அருகன் தண்டு இவைகளை மட்டும் நன்றாக இடித்து ஒரு பானையில் போட்டு 4 லிட்டர் தண்ணீர் விட்டு கொதிக்க வைத்து ஒரு லிட்டர் வந்தவுடன் இந்தக் கஷாயத்தை வடிகட்டிக்கொண்டு மற்றச் சரக்குகளை உரலில் போட்டு நன்றாக இடித்துத் தூள் செய்து துணிகொண்டு வடிகட்டிக் கொள்ளவும். பிறகு ஒரு பெரிய சட்டியை அடுப்பில் வைத்து இதில் வங்காள கற்கண்டைப் போட்டுப் பாகு மாதிரி செய்து இதில் சலாம்பிசிரியை இடித்துத் தூளைப் போட்டுக் கிண்டிக்கொண்டிருக்கும் போது சுத்திசெய்த அபினை இதில் போட்டு இத்துடன் பாலில் முருங்கைப்பூவை வேக வைத்த பாலையும் வடிகட்டிக்கொண்டு இதனையும் பாகுச் சாற்றில் ஊற்றிக் கிண்டிக்கொண்டு இருக்கும்போது அல்வா பதம் வரும் போதுமேல் செய்து வைத்து இருக்கும் மற்ற சரக்குகளின் சூரணத்தை இந்தப் பாலில் லேசாக தூவிக்கொண்டு

கிண்டிக்கொண்டு இருக்கும் படியாகச் சூரணத்தைமெது வாகத் தூவ வேண்டும். பிறகு நன்றாகக் கிண்டி வெந்த பிறகு இதனை ஆறவைத்து இதற்குத் தகுந்தாற்போல் நெய், தேன் இவைகளைப்போட்டுப்பிசைந்து பாட்டிலில் வைத்துக்கொள்ளவும்.

உட்கொள்ளும் அளவு :

10 கிராம் அல்லது 20 கிராம் எடை வீதம் **தினம்** *இரண்டு வேளை வீதம் காலை மாலை சாப்பிடவும்.*

உட்கொள்ளும் காலம்

ஒரு மண்டலம் (48 நாட்கள்)

பத்தியம் :

இல்லை.

இந்த மருந்தின் பலன்

உடல் வலிமையாகவும் திடமாகவும் இருக்கும்.

பெரும்பாடு மருந்து

கைவைத்திய மருந்து முறை 23

கறுவாலன் அரிசி அரைத்து குன்னிமணி சாறு ஒரு தம்பி பூலானால் கொள்ளவு நிரத்தும் கைகண்டது - செயறு வாதத்துக்குனாயி வேலை வேருயு நல்ல எண்ணெயு அரைத்து தேசிககாய் அளவு - கூடிகூறி மறும்,

விளக்கம் :

பெரும்பாடு (அதிகமான உதிரப்பெருக்கு) என்பது பெண்களுக்கு ஏற்படும் வியாதியாகும் இது வருவதின் காரணம் கர்ப்பப்பையில் புண் இருப்பதும் ரத்தத்தில்

சுண்ணாம்புச்சத்து குறைவாக ஏற்பட வாய்ப்பு உண்டு. மேற்படி வியாதிக்குக் கீழே குறிக்கப்பட்டுள்ள செய்முறை விளக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. கருவேலன் அரிசியை 30 கிராம் எடை எடுத்து ஒரு கல்வத்தில் போட்டு அரைத்துக் குண்டு மணிச்சாறு விட்டுக் கலந்து நாள் ஒன்றுக்கு இரண்டு வேளை வீதம் சாப்பிடவும். இப்படி 3 நாட்கள் உட்கொண்டால் பெரும்பாடு நீங்கும்,

பத்தியம்:

சூடான ஆகாரங்கள் காபி, மது, இவைகளை நீக்க வேண்டும். அதிக நடமாட்டம் இருக்கக்கூடாது. மேற்படி வியாதி இருப்பவர்கள் அதிக ஓய்வு எடுத்துக் கொள்வது நல்லது.

இரண்டாவது மருந்து முறை

மருதம்பட்டைச்சாறு, நல்லத்திப்பட்டைச்சாறு, உதயம் பட்டைச்சாறு இந்த மூன்று வகைகளையும் சமன் எடை எடுத்து உட்கொண்டாலும் பெரும்பாடு நிவர்த்தி ஆகும்.

அறுபத்து நான்கு வகை மருந்துக்கு சுத்தி மூலப்பொருள் குறிப்பு

சுவடி மருந்து முறை : 24

பழச்சாறு அமுரி-காடியிநரி மூனு கூட்டி உப்பு-சுண்ணம்
வெடியுப்பு-சாறு சிறும் பலம் ஒன்னு பாத்து கொதிக்க
வத்து-கிலிகட்டி தூண்ணொரு மண்டலம் வைத்து
யெருத்து கொன்று.

விளக்கம்:

மனிதன் உட்கொள்ளும் மருந்துகள் அனைத்தும் சில மூலிகைகள் கிழங்கு வகைகள் விஷ பாஷாண மருந்துகள்

இலைகளில் சேர்த்துத்தான் மருந்து தயார் செய்யப் பட்டதாகும். இப்படித்தயார் செய்யும் மருந்துகளை எல்லா மருந்து வகைகளையும் சுத்தி செய்வது மிக அவசியமானது. குறிப்பாக அனைத்துப் பாஷாண மருந்து களையும் சுத்தி செய்வதின் மூலம் விஷ மருந்துகளில் இருக்கக்கூடிய விஷத்தன்மைகளைக் குறைத்து உட் கொள்ளும் அளவிற்கு விகிதமான முறையில் அமைவதற்கு இத்தகைய சுத்திகள் மிக அவசியமானது. கீழே குறிக்கப் பட்டிருக்கும் முறையினால் 64 வகையான மருந்து வகை களைச் சுத்தி செய்யலாம்.

1. எலுமிச்சம்பழச்சாறு 2. அமுரி 3. காடி அமுரி இந்த மூன்றுடன் உப்பு, சுண்ணாம்பு, வெடியுப்பு, எலுமிச்சம் பழச்சாறு, சீனப்பழம் இவைகளைக் கிளிகட்டிக் கொதிக்க வைத்து ஒரு 18 நாட்களுக்குப்பிறகு எடுத்துப் பத்திரமாக பாட்டில்களில் அடைத்து வைத்துச் சரக்குகளைச் சுத்தி செய்யலாம். மேற்படி முறை மருத்துவ அறிஞர்களுக்கு மட்டும் பயன்படும்.

மதன காமேசுர லேகியம்

சுவடி முறை : 25

சுக்குடன் பெரு சீரகம் மதுரம்-கிராம்பு மூலகு - வால் மிளகு - திப்பிலி - ஊமத்தவிதல் - சிறு தேக்கு - தாளிகாயி- கடுக்காய் ஏலம் - சாதி காயி - பத்திரி - மல்லி - தாளிச பத்திரி - முள்ளிவிதல் - நெல்லிகாயி - அசுவகெந்தி - செம்பு கப்பு - கஸ்தூரிமஞ்சள் - கரகொலம் - தானிகாயி - கசகசா சினிகாரம் - உளுந்து ஆவின்நெய் - முள்ளிலவம்பூசினனு - நிலப்பனைகிழங்கு - முந்திரி பழம் வகைகரி பூ - க - யிடித்து பொடித்து வடிகட்டி கற்கண்டு பூ - ௨. நல்ல தண்ணீர் ஒரு வானளாம் வயித்து பெயூகிரம் கழுவி காச்சி துணியில் வடிகட்டித்தான் பிளிந்து யிருப்பு சுறண்டியில் ஊற்றி சட்டி யில் சர்க்கரை பசுவின்பால் விட்டு பசுமாக காய்ச்சி சூரணத்தைப் போட்டு துடுப்பு பிடித்து கிண்டி நெய்யை

விட்டுக் கிளறிலயின் தேனை விட்டு பாத்திரத்தில் வழித்து எடுத்து நித்தமும் மண்டலம் கொள்ளே.

மதன காமநீ கருலேகியம்

தேவையான மருந்துகளின் விபரம் :

விளக்கம்;

1.	சுக்கு	70 கிராம்
2.	பெருஞ்சீரகம்	,,
3.	அதிமதுரம்	,,
4.	கிராம்பு	,,
5.	மிளகு	,,
6.	வால்மிளகு	,,
7.	திப்பிலி	,,
8.	ஊமத்தைவிதை	,,
9.	சிறுநாகப்பூ	,,
10.	தான்றிக்காய்	,,
11.	கடுக்காய்	,,
12.	ஏலம்	,,
13.	சாதிக்காய்	,,
14.	சாதிபத்திரி	,,
15.	மல்லி	,,
16.	தாளிசபத்திரி	,,
17.	முள்ளிவிதை	,,
18.	நெல்லிக்காய்	,,
19.	அசுவகெந்தி	,,
20.	செம்புகம்பு	,,
21.	கஸ்தூரிமஞ்சள்	,,
22.	தக்கோலம்	,,

23. கசகசா ,,
24. சீனிக்காரம் ,,
25. உளுந்து ,,
26. ஆவின் நெய் ,,
27. முள் இலவம்பிசின் ,,
28. நிலப்பனைக்கிழங்கு ,,
30. சுத்திசெய்த கஞ்சா ,,
31. தேன் 200 கிராம்
32. முந்திரிபழம் ,,

லேகியம் செய்யும் முறை :

மேற்குறித்த மருந்து வகைகளை விகிதப்படி எடுத்துக் கொண்டு நன்றாகக் காயவைத்துக் கல்லுரலில் போட்டு இடித்துத் தூள் செய்து துணிகொண்டு வடிகட்டிச் சூரண மாகச் செய்து கொண்டு சர்க்கரைப் பாகு செய்து இந்த பாகில் மேற்படி சூரணத்தைப் போட்டு நன்றாகக் கிண்டி மெழுகு பதம் வந்தவுடன் நெய், தேன் விட்டுப் பிசைந்து ஒரு பாட்டிலில் வைத்துக்கொண்டு கீழ்க் குறிப்பிட்ட அளவுப்படி சாப்பிடவும்.

உட்கொள்ளும் அளவு :

தினம் 20 கிராம் வீதம் காலை, மாலை சாப்பிடவும்.

உட்கொள்ளும் காலம்

48 நாட்கள் சாப்பிடவும். (ஒரு மண்டலம்)

பத்தியம் ;

சத்துள்ள உணவு வகைகளைச் சாப்பிடவும்.

தீரும் வியாதிகள்:

உடல் அசதி, நரம்புத் தளர்ச்சி, உடல் பலகீனம், சோர்வின்மை, பசியின்மை, உடல் நடுக்கம் இவைகள் தீரும்.

குன்மத்துக்கு மருந்து

சுவடி மருந்து முறை 26

நெல்லிகாயி செந்தகம் - காந்தம் யிரதம்
வாளுவை - வெங்காரும் - சாதிகாயி
கடுக்காயி - தான்றி காயி - சுத்த மிலகு
திப்பிலி யறத்தை கடுகு யிவை சம்மன்
சேத்து சாறவை பிறண்டை முருங்காயி
கொடி வேலி - ஆடாதொடை - குப்பமேனி
நொச்சி - யிலை யிலை சாறுவாத்து
அரைத்து நிழலிலுணைத்தி பஸ்ப்பமாக்கி
கூடுக்கையில் டைத்து வேறு கடி பிற
மானம் குடுக்கவு - குன்மம் மெல்லா

விளக்கம்

தேவையான மருந்துகளின் விபரம் :

1.	நெல்லிக்காய் கெந்தகம்	35 கிராம்
2.	ஊசி காந்தம்	,,
3.	ரசம்	,,
4.	வாலுவை யரிசி	,,
5.	வெங்காரம்	,,
6.	ஜாதிக்காய்	,,
7.	கடுக்காய்	,,
8.	தான்றிக்காய்	,,
9.	சுக்கு	,,
10.	மிளகு	,,
11.	திப்பிலி	,,
12.	அறத்தை	,,
13.	கடுகு	,,

மருந்து செய்யும் முறை :

மேல் குறிக்கப்பட்டிருக்கும் மருந்து வகைகளைக் குறிக்கப்பட்டுள்ள அளவு எடுத்துச் சாரணைவேர், பிரண்டை வேர், முருங்கை, கொடிவேலி, ஆடாதொடை குப்பைமேனி, நொச்சி, இலைகளின் சாற்றை ஒவ்வொரு தடவையாக மேற்குறிக்கப்பட்டிருக்கும் மருந்து வகைகளை அரைத்து நிழலில் உணர்த்தி இதைப் பஷ்பமாக்கி ஒரு பாட்டிலில் வைத்துக் கொண்டு 130 மி. கிராம் எடை வீதம் (ஒரு நாளைக்கு) இப்படி ஒரு மண்டலம் சாப்பிட்டு வந்தால் குன்மம் குணமாகும்.

பத்தியம்

வியாதிக்கேற்றபடி உணவு சேர்த்து நீக்க வேண்டியவை நீக்கிக்கொள்ளவும்

பதினெட்டு குன்ம வகைகளுக்கும் வாயுவு சம்மந்தப்பட்ட வியாதிகளுக்கும் மருந்து

கவடி மருந்து முறை 27

கொடி வேலி நொச்சி ஆம்பல், வெள்
ளருகு – சீத்திலி - வெள்ளை காக்கறட்டான்
சில் / பிறண்டைத் தூதுவேலை - செங்க
தாரி - நன்னாரி – மாதலை - முருங்கை - மா
வுலிங்கை - கரைச்சி – சிறுகாஞ்சோறி
எருக்கு மேலி வேலி பறுத்தி - சாறணை
பெரு மருந்து - புல்தடைவை பிடானை
விளிவகைக் கரி வேர் பூ - க யிடித்து
காய வயித்து வேலி பருத்தி - முடக்
கொத்தான் - சாறனை மெளிமா விலங்கை
யிவகை கன் சாறு மரி. யிந்த சாத்தில்
ஷபடி பொடி துல் பிசரி - வெயிலில்

வயித்து - பெருங்காயம் காந்தம் - சீரகம்
கடுகு - றோகணி வகைக் களஞ்சி மூனு
அரத்தை சதகுப்பை - களஞ்சு
கடுக்காய் பத்து - தானி காயி ஒரு ரூபா
நேர் வாளம் - காய - புடம் மிட்டு முத்திண
பொடியுடனே கலந்து பஸ்பமாக்கி
தேனில் லேர் சுட்டி திறமாறு கொள்ள
லூ - கயிப்பு புளிப்பு தள்ளவு யசு
குன்மம் வாயுவு தீரும்.

விளக்கம் :

குன்ம வியாதியில் 18 வகை உண்டு. இவற்றிற்கான மருந்துகளை கீழே மிக விளக்கமாகக் கொடுக்கப் பட்டுள்ளது.

தேவையான மருந்துகளின் விபரம் :

1.	கொடிவேலி வேர்	35 கிராம்
2.	நொச்சி இலை	,,
3.	ஆம்பல்	,,
4.	வெள்ளெருக்கு	,,
5.	சீந்தில்கொடி	,,
6.	வெள்ளை காக்கரட்டான் வேர்	,,
7.	அகில் .	,,
8.	பிரண்டை	,,
9.	தூதுவேளை இலை	,,
10.	செங்கத்திரி இலை	,,
11.	நன்னாரி வேர்	,,
12.	மாதுளைதோல்	,,
13.	முருங்கைப் பட்டை காய்ந்தது	,,
14.	மாவிலங்கு பட்டை	,,
15.	சிறுகாஞ்சி	,,
16.	குப்பைமேனி இலை	,,
17	வேலி பருத்தி இலை	,,

18. சாரணை வேர் ,,
19. பெரு மருந்து இலை ,,
20. புளி ,,
21. கடலை ,,
22. முடக்கொத்தான் இலை ,,
23. பெருங்காயம் ,,
24. ஊசிகாந்தம் ,,
25. சீரகம் ,,
26. கடுகு ரோகிணி ,,
27. அரத்தை ,,
28. சதகுப்பை ,,
29. கடுக்காய் ,,
30. தான்றிக்காய் ,,
31. நீர்வாளம் (சுத்தி செய்தது) ,,

மருந்து செய்யும் முறை :

மேற்குறிப்பிட்டிருக்கும் மருந்து வகைகளை நன்றாக இடித்துக் காயவைத்து, மறுபடி இடித்துத் தூளாக்கி, இதைச் சூரணமாகச் செய்து துணி கொண்டு வடிகட்டிப் பத்திரமாக வைத்துக் கொள்ளவும். உட்கொள்ளும் அளவு கீழே குறிக்கப்பட்டுள்ளது.

உட்கொள்ளும் அளவு:

ஒரு வேளைக்கு 10 கிராம் எடை வீதம் 48 நாட்கள் உட்கொள்ளவும்.

அனுபானம்:

இந்த சூரணத்துடன் தன்மத்திற்குச் செய்யப்பட்ட பஸ்பத்தில் ஒரு வேளைக்கு 130 மி. கிராம் எடைக்கு மேற்படி சூரணத்துடன் கலந்து இத்துடன் தேன் கலந்து உட்கொள்ளவும்.

பத்தியம்:

உப்பு, புளிப்பு இவைகள் நீக்கவும்.

துடை வாலை விப்புறு இவைகளுக்கு கறி எண்ணை மருந்து

சுவடி மருந்து முறை 28

பசுவுன் நெயி வெள்ளை காக்கறட்டான்
துறு தொட்டி தூது வேலை யிடித்து
வகைகரி சாறு - சீரகம் - கறுஞ் சீரகம்
வேலிச்ச புசினு - ஓலம் கொஷ்ட்டம்
சூல வங் மதி மதுரம் - கடுகாயி
தானி காயி நெல்லி புள்ளி வகைக்கு
ஒரு கவஞ்சு அந்த சாறு விட்டு
அரைத்து நெயில் கலந்து பித்தத்தில்
வடித்து போட துடை வாலை யலுத்திரம்
விப்புறுகு தீறும்.

தேவையான மருந்துகளின் விபரம் :

விளக்கம் :

1.	பசுவின் நெய் 200 மில்லி	
2.	வெள்ளை காக்கரட்டான் வேர் 35 கிராம்	
3.	தூதுவேளை சாறு	50 மில்லி
4.	சீரகம்	35 கிராம்
5.	கருஞ்சீரகம்	,,
6.	வேலம் பிசின்	,,
7.	ஓமம்	,,
8.	கோஷ்டம்	,,
9.	லவங்கப்பட்டை	,,
10.	அதிமதுரம்	,,

11. கடுக்காய் ,,

12. தான்றிக்காய் ,,

13. நெல்லிமுள்ளி ,,

மருந்து செய்யும் முறை

மேலே குறிக்கப்பட்டிருக்கும் மருந்துவகைகளை விதிதப்படி எடுத்துக்கொண்டு துாதுவேளைச் - சாற்றை விட்டு அரைத்துப் பந்த எண்ணை வடித்து (சுடர் தைலம், கீழ்கண்ட வியாதிகளுக்கு வயதுக்கு ஏற்றபடி கொடுக்கவும்.

தீரும் வியாதிகள் :

துடைவாளை, விப்புருதி, உள்ளுக்கும் மேலுக்கும் தாலி வந்தால் நிவர்த்தி ஆகும்.

பத்தியம் :

புளிப்பு, உப்பு இவைகள் நீக்கவும், மருந்து சாப்பிடும் வரை பத்தியத்தைக் கடைப் பிடிக்கவும்.

உடல் நீர்க்கட்டு, சதைப்பிடிப்பு, உடல் விக்கத்திற்கு சூலைப் பிடிப்புக்கு முறங்கால்கட்டு இவை நிவர்த்திக்கு மருந்து

சுவடி மருந்து முறை 29

சதைநோவு சாரவாய்வு இதுவெல்லாம் தீரும். பிற நீர்க்கட்டு, பிறங்கால் கட்டு - விக்கத்துக்கு, மருந்துமுண்டு பிடிப்புங்கலை - புடி - முணு ணாலு பிடிதன்னிற் போட்டு - தாழியா காச்சிமுண்டு ணால் குடுக்க வேணு - பத்தியம்

சொடிகள்ளிப்பால் உளக்கு திருகு கள்ளிப்பால் உளக்கு திருகு கள்ளிப்பால் அளந்து ஈரவெங்காயம் - படி - ௧.

வெள்ளத்து எண்ணை ஆள்ந்து - ௩ வெங்காயு எண்ணை முனு வகையு பாலயுந்த விர கடைச்சரக்கை யிடித்து மூனு படி கன்னிறாக விட்டு ரெண்டு அரைத்து தன்னிறு கயிறாக சிமிந்தயாலும் எண்ணையெல்லாம் ஊற வெங்காயத்தை அரிந்துபோட்டு காழ்ச்சி மெழுகு பதமாக் யிறக்கி வேளைக்கு ஒரு நூார் யிளவு குடுக்கவு - பத்தியம் கடினமாகச் செய்யவு.

தேவையான மருந்துகளின் விபரம்

விளக்கம் :

1,	கொடிகள்ளிப்பால்	1 லிட்டர்
2.	திருகுகள்ளிப்பால்	,,
3.	சதுரகள்ளிப்பால்	,,
4,	ஈரவெங்காயம் சார்	,,
5	விளக்கெண்ணை	,,

மேற்குறிக்கப்பட்ட மருந்து வகைகளை ஒரு சட்டியில் ஊற்றி இத்துடன் எண்ணையை ஊற்றி நன்கு காய்ச்சி எண்ணைப்பதம் வரும்போது வெங்காயத்தை வெட்டி மேற்படி எண்ணையைப்போட்டுக் கிண்டி ஆறினபிறகு வடிகட்டி வைத்துக்கொள்ளவும்.

உட்கொள்ளும் அளவு:-

ஒரு காசு எடை அளவு (5 கிராம்) எடை

உட்கொள்ளும் காலம்

அரை மண்டலம் (24 நாட்கள்)

பத்தியம்:

மிகக்கடினமான இச்சாபத்தியம்.

தீரும் வியாதிகள் :

உடல்நீர்க்கட்டு, சதைப்பிடிப்பு, உடல்வீக்கம், சூலைப் பிடிப்பு, புறங்கால்கட்டு, இவைகள் திரும்.

சித்த சுரவிரை மருந்து செய்யும் முறையும் உபயோகமும்.

சுவடி மருந்து முறை : 30

சூதாரம் வெண்ங்காரம் அரிதாரம் கெந்தகம் திப்பிலி
மூலகு யிவை சமன்னாக கய்யான்த கரைச்
சாத்திலரைத்து
மிளகு பிறமான உண்டை பண்ணி வாத சுரத்துக்கு மல்லி
சாத்தில்லிடவு சில்ர் பன் சுரத்துக்கு கறுகட்டியிடவு-
நாலுனால்மாரலுக்கு செவுரி மனோசிலை வெங்காரம்
ஊமத்தையிலை சாத்தில் லரைத்து பாசிப்பயிறு பிற
மாணு உண்டை
செய்து பாலில் லாகு தன் முலைப்பாலில் லாகுதல்
விடவு.

தேவையான மருந்துகளின் விபரம்:

விளக்கம் :

1.	சூதாரம்	20 கிராம்
2.	வெங்காரம்	,,
3.	அரிதாரம்	,,
4.	கெந்தகம்	,,
5.	திப்பிலி	,,
6.	மிளகு	,,

மேற்குறிப்பிட்ட மருந்து வகைகளைக் கையாந்தரை இலைச்சாற்றில் அரைத்து மிளகு அளவுக்கு மாத்திரை செய்து நிழலில் காய வைத்துக்கொண்டு கீழ்க்குறிப்பிட்டு இருக்கும் வியாதிகளுக்குத் தக்க அனுமானத்தில் கொடுக்கவும்.

1. மல்லி சாற்றில் மேற்படி மருந்தைக் கலந்து கொடுத்தால் வாதசுரம் நீங்கும்.

2. மேற்படி மருந்தை கருப்புக்கட்டியில் கொடுத்தால் பலசுரம் நிவர்த்தியாகும்.

இவ்வாறு நான்கு நாட்களுக்கு கொடுக்கவும்

பத்தியம்:

சுரம் நிவர்த்தியாகும் வரை இச்சாபத்தியம்

பவுத்திரம் நொந்த புண் புரைக்கு மருந்து

சுவடி மருந்து முறை 31

மலத்துவாரம் - குதிரை மயிரினால் கட்டி

ஒரு பல்லாகையில்விட்டு மூடி சீலை மண்

செயிது சில தாரையில் புதைத்துப் திணுஞ்
சானால் எடுத்து எருக்கம்பால் கொண்டு
வந்து அதில் கடுக்காயி பொடி போட்டு
முறிஞ்சு தன்னீறாதும் - அந்த தன்னிச
சாத்து சுவற அரைத்து நிலை உண்டியர்
கல பிடி காய் வயித்து எருக்கம் பாலிலு
ரைத்து பஞ்சீல் ஊட்டி புன்னில் புரையில்
போட வெதுனால் சென்ற புன்று முதல்
ஆரும் - சனத்துத்து வரும்.

விளக்கம்:

பவுத்திரம் வருவதற்குக் காரணம் தீய ஒழுக்கத்தினாலும், அதிக உஷ்ணத்தினாலும் வருகின்றன. இத்தகைய பவுத்திரம் அதிக நாட்கள் ஆனவுடன் இதற்குச் சரியான முறையில் சிகிச்சை செய்யாத காரணத்தினால் பவுத்திரம் உடைந்து நொந்த புண்ணாகி புரையும் ஓடும் இந்த நிலையில் இதன் நிவர்த்திக்குக் கீழே மருந்தினைப் பற்றிச் சொல்லப்பட்டுள்ளது.

மரவெட்டையை குதிரை மயிரினால் கட்டி ஒரு பலகையில் வைத்து இதனை ஒருமுடி சீலைமண் செய்து தரையில் வைத்துப் புதைத்து அதை 15 ஆம் நாள் எடுத்து எருக்கம்பால் கடுக்காய் பொடி இவைகளைக்கலந்து சீலைமண் செய்து வைத்திருந்ததைப் பிரித்து அதில் இவைகளை போட்டுத் தண்ணீரை விட்டு அரைத்து இதில் எருக்கப் பாலையும் விட்டுக் கலந்து ஒரு பஞ்சினால் தொட்டு மேற்படி புண்ணில் தடவினால் புண்கள் ஆறும்.

குறிப்பு :

மேற்படி பாடலில் அக்காலத்துச் சுவடியில் சில வார்த்தைகளைச் சொல்லமைப்பு புரியாமல் எழுதப்

பட்டுள்ளது. இருப்பினும், இதனை விளக்கி மற்ற நூல்களையும் ஒப்பிட்டு அனுபவ ரீதியிலும் இந்த மருந்தினை இத்தகைய புண்களுக்கு மட்டும் பயன்படுத்தவும் என்பது ஆசிரியருடைய கருத்தாகும்.

குமரி பற்பம் முறையும் இதன் உபயோகமும்

சுவடி மருந்து முறை 32

குமரி பற்ப்பும் - மனோசிலை - வீ. க.
கெந்தகம், வீ ச - காந்தம் - வீ யசா
அப்பொடி வீ நயஉ, சுக்கு - திப்பிலி
மிலகு - கடுக்காயி யரு, பொரி காரம்
உ .... க. இவையெல்லாகு மரிசாறு
விட்டு ரெண்டு சாமம் அரைத்து வேரு
கடி எழுனால் தேனில் கொள்ளவு
ரெண்டு நேரமு கறப்பு ளதவுரம்
வெந்நீர் பரிமாற்வு - மருபத்தியம்
மானால் நெய் பால் குட்டி கொள்ளவு
தீரும் விசாமி குடல் வாதம் பாண்டு
ரூபம் - கவிசைசம் கோதறம் வாயுவு
இரஷ்சி குடல் பிறட்டு யிவை விசாதி தீரும்உ.

தேவையான மருந்துகள் விபரம்

விளக்கம் :

1. மனோசிலை (சுத்தி) 10 கிராம்
2. கந்தகம் (சுத்தி) 20 கிராம்
3. காந்தம் (சுத்தி) ,,

4. அரப்பொடி 20 கிராம்
5. சுக்கு 35 கிராம்
6. மிளகு ,,
7. திப்பிலி ,,
8. கடுக்காய் ,,
9. பொரிகாரம் ,,

மேற்படி மருந்துவகைகளை அளவுப்படி எடுத்துக் கொண்டு கல்வத்தில் போட்டு குமரிச் சாற்றை விட்டு இரண்டு ஜாமம் (6 மணி நேரம்) நன்கு அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து இதனை ஓட்டில் வைத்து மேல் மூடி போட்டு சீலைமண் செய்து 20 விராட்டியில் புடம் போட்டு எடுத்துப் பஷ்பமாக்கிக் கொள்ளவும்.

உட்கொள்ளும் அளவு :

தினம் இரு வேளை வீதம் வேளைக்கு 130 மில்லி கிராம் எடை வீதம் உட்கொள்ளவும்.

உட்கொள்ளும் காலம்

7 நாள் விட்டு 7 நாள் சாப்பிடவும். இப்படி அரை மண்டலம்

பத்தியம்:

இச்சா பத்தியம் இருக்கவும். நெய், பால் சேர்த்துக் கொள்ளவும்.

பவுத்திரம், கண்டமாலை இவைகள் எண்ணெயில் நிவர்த்திக்கு மருந்து

கைவழி மருந்து முறை : 33

கத்திரினால் கனல்லல சுட்டு சாம்பலெடுத்து
புண் வாயில் அழுத்தவும் ஒத்தட்டி

உத்தாமணியிலையை ஒத்திடவுந் தீரும்.
சாம்பிறாணி புகை பிடிக்கவு உ
உள்ளுக்கு பாருவு நெயி கடுக்கவறலு
யிப்படி யிருபதுனால் செய்து வறவும்
பவுத்திரம் தீரும். கண்ட மாலை கரி எண்ணை
நல்ல எண்ணை - வரி ஆமணக்கண்ணை
வரி - வேப்பெண்ணை ஞ மூண்டும்
கலந்து சிறு கீரை வேர் - ஒரு புடி
பிளி - நட்டை - கிழங்கு - க - பெருந்தழை
கிழங்கு - க யிது மூணு பால் விட்டு
அரைத்து எண்ணையயில் கலந்து பத்தில்
வெரியிட்டு உள்ளுக்கு குடுத்து புண்ணில்ம்
பூசவும். கண்ட மாலை - பவுத்திரம் -
கறப்பான் கிறந்தி தீரும் - யிச்சா பத்தியம்

பவுத்திரத்திற்கு மருந்து

1. கத்திரிக்காயை அணலில் சுட்டு இந்தச் சாம்பலை பவுத்திர வாயில் பூசினால் நிவர்த்தியாகும்.

2. உத்தாமணி இலையை விளக்கெண்ணெய் தடவி அணலில் வாட்டி, பவுத்திர வாயில் ஒத்தனம் செய்தால் நிவர்த்தியாகும்.

3. சாம்பிராணிப் புகையை பவுத்திர வாயில் படும் படிச் செய்தாலும் நிவர்த்தியாகும்.

மேற்குறிப்பிட்டிருக்கும் முறைகளைத் தொடர்ந்து 24 நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு இரண்டு வேளை வீதம் இவ்வாறு செய்ய வேண்டும். உள்ளுக்குப் பசு நெய் தினம் ஒரு டீ. ஸ்பூன் சாப்பிடவும்.

கண்டமாலைக்கு கரிஎண்ணை (சுடர் தைலம்)

தேவையான மருந்துகளின் விபரம்:

1.	நல்லெண்ணெய்	500 மில்லி
2.	ஆமணக்கு எண்ணெய்	,,
3.	வேப்பெண்ணெய்	,,
4.	சிறுகீரை வேர்	100 கிராம்
5.	புளி	25 கிராம்
6.	நடலை	50 கிராம்
7.	பெருந்தாழை கிழங்கு	200 கிராம்

மருந்து செய்யும் முறை :

மேற்குறிப்பிட்டிருக்கும் மூன்றுவித எண்ணெய் வகைகளை விகிதப்படி எடுத்து ஒன்றாகக்கலந்து ஒரு சட்டியில் ஊற்றி லேசான தீயிட்டு சுடவைத்துக் கொள்ளவும். பிறகு மற்ற மருந்து வகைகளைப் பசும்பாலிட்டு அரைத்து ஒரு துணியில் சுத்தி இதனைக் காயவைத்துப் பந்தம் மாதிரி கட்டி இதனை நன்கு காயவைத்து இதன் மேல் மேலே செய்து வைத்திருக்கும் எண்ணெயில் நனைத்துக்கொளுத்தி இது எரியும் போது சொட்டுச் சொட்டாக எண்ணெயை வடியும் இதனை ஒரு பாத்திரத்தில் சேகரித்து வைத்துக் கொள்ளவும். இந்த எண்ணெயை உள்ளுக்கும் கண்டமாலை புண் மேலும் தடவலாம்.

உட்கொள்ளும் அளவு :

ஒரு நாளைக்கு ஒரு வேளைக்கு 10 மில்லி வீதம் சாப்பிடவும்.

உட்கொள்ளும் காலம் :

48 நாட்கள் சாப்பிடவும்.

பத்தியம் :

இச்சா பத்தியம்.

தீரும் வியாதிகள் :

கண்டமாலை, கண்டமாலைபுண். இவைகள் தீரும்.

கண் விழிகளில் நீர் வடிதல் கண் கலக்கம், கண் புண், புரை இவைகள் நிவர்த்திக்கு களிக்கு மருந்து

சுவடி மருந்து முறை 34

கலிக்கும் - பித்தநீர் கோபம் - திப்பிலி குண்டு மணிப் பருப்பு நேர் வாளம் பருப்பு வேப்பம் பருப்பு - வெள்ளைச் சாறணைச் சாத்திவிட்டு அரைத்து கன்னில் கலக்க மிடவும் - க - புன்புரைக்கி துளிகை யீ - ஒருமுஞ் சுர அடித்து அதின் வாயிலாசம் விட்டு யிருவது நேர் வாளம் பருப்பு - துணிச்சு - வரவும்.

விளக்கம் :

கண் விழிகளில் பலவிதக் காரணங்களால் நீர் வடிதல், கண் அரிப்பு, கண் விழிகளின் புண், புரை. கண் விழிகளில் கலக்கம், இவைகளின் நிவர்த்திக்கு மருந்து பல நூல் களில் பல வகையான மருந்துகளைப்பற்றி குறிப்பிட்டு இருக்கிறார்கள், இருப்பினும் இச்சுவடியில் குறிப் பிட்டிருக்கும் மருந்து மிகச் சிறந்த மருந்தாகும். இந்த மருந்தினைப் பற்றிக் கீழே விளக்கமாகக் கொடுக்கப் பட்டுள்ளது.

தேவையான மருந்துகளின் விபரம்

1.	திப்பிலி	10 கிராம்
2.	குண்டுமணிபருப்பு	,,
3.	நீர்வாளம் பருப்பு	,,
4.	வேப்பம் பருப்பு	,,

இவைகளை விகிதப்படி எடுத்துக் கொண்டு ஒரு கல்வத்தில் போட்டு வெள்ளைக் சாரணிசாற்றை விட்டு நன்றாக அரைத்து உருண்டை செய்து நிழலில் காய வைத்துக் கொள்ளவும். இந்த மருந்தினை முலைப்பாலில் உறைத்து மூன்று சொட்டு விதம் கண் விழிகளில் போடவும். இப்படி ஒருவாரம் போட்டு வந்தால் கண் வியாதிகள் நிவர்த்தியாகும்.

யிலைஇருமலுக்கு நெயி மருந்து செயியும் முறை

சுவடி மருந்து முறை 35

பசுவின் நெயி படி - க
தூரது லீங் காயி படி - க
தூந்து வி வம்பு புடி -
தாது விளயிலை படி
யிரு வேங்காயம் பூ பூ வ
நற் சீரகம் பூ - வ
ஆதி மதுரம் பூ - வ
கையிந்து மருந்து யெல்லாம் தல்னீர்
விட்டு அரைத்து நெயிலே யில நீர்
மூணு கன் நிரந்து விட்டு அதில் அரை
மருந்தே போட்டு பத்தில் வடித்து ஒரு
வேலை ஒரு யெல்லும் பிகாயி வலது
தின்னவும் அந்திக்கி வெவ்னீர் வச்சு
முழுகவு யெட்டு னால் தின்ன இரு விசாதி
மூனு னாலே ஒரு கால் வென்னீர்வச்க
நெய்யி தேச்சு முழுகவு புளி தல்லவும்
கலஞ்சு யிடை கொண்டுவிட மாதுா

நத்தும் மதவிகாரம் மாய வலி யமாய்த்
தானிருப் பிரதுனம்ப வரு காரியமாய்
காயம் நெகிளாது களந்துலக்காம் ...... ரயி
ருத்தும் - சகல விசாதியும் தீரும்.

தேவையான மருந்துகளின் விபரம் :

விளக்கம்:

1.	பசுவின் நெய்	250 கிராம்
2.	வெங்காயம்	500 கிராம்
3.	தும்பைச்சாறு	500 மில்லி
4.	தூதுவளைச்சாறு	,,
5.	பூண்டு	100 கிராம்
6.	நச்சீரகம்	,,
7.	அதிமதுரம்	,,

உட்கொள்ளும் அளவு :

நாள் ஒன்றுக்கு ஒரு சின்ன கரண்டி வீதம் சாப்பிடவும்.

உட்கொள்ளும் காலம் :

24 நாட்கள்

பத்தியம்:

புளி நீக்கவும்.

உ- தீரும் வியாதிகள்

சுலை இருமல் அதிக உஷ்ணம் நீங்கும்.

மருந்து செயயும் முறை;

மேற்குறிக்கப்பட்டிருக்கும், மருந்து வகைகளை அளவு விகிதப்படி எடுத்துக் கொண்டு ஒரு சட்டியில் பசுவின் நெய்யை ஊற்றி அத்துடன் இந்த மருந்து வகைகளைத் தண்ணீர் விட்டு அரைத்து மேற்படி சாறு வகைகளையும் ஊற்றி நெய்யுடன் கலந்து அடுப்பில் வைத்துச் சிறுகத்

தீயிட்டுக்காய்ச்சி நெய்ப்பதம் வந்தவுடன் ஆறவைத்து வடிகட்டி வைத்துக் கொள்ளவும்.

கௌரியார் திஷ்ய எச்சை

சுவடிக் குறிப்பு: 36

ஓம் வங்கி ங் கெசரி யேரும் வென்று
கு அ உருச் செவிக்க சித்தியாம்
சாங்கால் வேலையிலை வாசி பார்க்கவு
தேவி பூசையில்த் தோத்திரம் செய்யவும்.

விளக்கம் :

தேவி அம்மனை அந்தி வேளையில் மேல் குறிப்பிட்டிருக்கும் முறைப்படி ஜெபித்து தோத்திரத்தை மேற் குறிப்பிட்டிருக்கும் எண்ணிக்கையின்படி பிரார்த்திக்கவும். என்று மேல் உள்ள பாடலில் குறிக்கப்பட்டுள்ளது

உன் மனையா சத்தி தீட்சை

சுவடி குறிப்பு: 37

ஓம் மங் வங் சிங் உம் பிடாவே நம
வென்று கு க உரு செவிளை சத்தியாம்
சாங்காலம் வாசி பாற்கவும் தேவி
பூசையில் தோத்திரம் செய்யவும்.

விளக்கம் :

மேற்படி பாடல் தேவி அம்மனை வணங்குவது பற்றிக் குறிக்கப்பட்டுள்ளது.

கோயிலுக்கு சென்று வணங்குவதை குறித்தது

சுவடிக் குறிப்பு: 38

பு மரமோ – பகல் நெச பசம் சோறன்
கருனாவருன .... வாய் தான் தானிய சம்

பூரண சத்தி பத்திரவாய் : ஓம் சிவ ....
சுத்தி பன்னியம் பிசுசி பன்னி துறவமித்து
நொடிக்கவு .... பலி தாங்கியிலை
யே திலகம் மிட்டு ஒருத்திய்யே நோளி
செ ... சா வறுவாள, யம்லாயா யவா
வென்று றாது இசே நில நிலதிருனுத்தை யத்தி
சக்கறத்தை ஒட்டி ஒரு ஆ
ெ .... உள்ள கைய்யே வந்துகொள்ள
செய்திரக்க யிருந்து கொண்டு செவி ...
...... ஆளும் கையிம் வரும் சோதினை பார்க்சுவும்.

விளக்கம்:

மேற் குறிப்பிட்டிருக்கும் பாடல் கோயிலுக்குச் சென்று கடவுளை எப்படி வணங்குவது என்பதைப் பற்றிக் குறிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இதனை பிரித்துப் பார்க்கும் போது அவரவர் விருப்பத்துக்குத் தகுந்த கடவுளை வணங்கும்போது மனதை ஒருநிலைப்படுத்திக் கொண்டு கண்களை மூடிக்கொண்டு கையை உள்ளங்கையுடன் சேர்த்து மூக்கிற்கு நேராகச் சேர்ந்திருக்கும் 2 ஆட்காட்டி விறல்கள் பார்த்திருக்க வேண்டும். 2 கட்டை விரல்களும் மார்பை நோக்கி இருக்க வேண்டும். நடுவிரல்கள் இரண்டும் மேல்நோக்கி இருக்கவேண்டும். இப்படி எல்லாம் நமது பணிவுடன் நின்று நாம் என்ன வேண்டிக் கொள்கிறோமோ அதனை மனதுக்குள் நினைத்து ஆண்டவனை வணங்க வேண்டும், அப்பொழுது தான் நாம் உண்மைாகக் கடவுள் பக்தியுடன் வணங்குவதாகப் பொருள்.

வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை, பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர். } மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.